திருக்குறள்



மதுரை பாபாராஜ்

திருக்குறள் – இன்பத்துப்பால்

ஆசிரியர்: மதுரை பாபாராஜ்

ISBN: 978-81-7904-480-3

முதற்பதிப்பு: 2016

விலை: ரூ. 65/–

காப்புரிமை © 2016 ஆப்பிள் பப்ளிஷிங் இண்டர்நேஷனல் (பி) லிமிடெட்

காப்புரிமைச் சட்டத்தின் கீழ் இந்நூல் பதிவு செய்யப்பட்டுள்ளது. வெளியீட்டாளரின் எழுத்து மூலமான அனுமதி இன்றி, இந்நூலை மறுபதிப்பு செய்யவோ, வேறு மொழிகளில் மொழி பெயர்க்கவோ, அச்சடிக்கவோ, நகல்படி எடுக்கவோ, மின்னணு வழியாக பதிப்பிக்கவோ கூடாது.

வெளியீடு: ஆப்பிள் பப்ளிஷிங் இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்
130, நெல்சன் மாணிக்கம் ரோடு, சென்னை – 29. இந்தியா
தொலைபேசி : +91 44–3244 0099, +91 44 3246 4677
தொலைநகல் : 91–44–26211085
மின்னஞ்சல் : cs@applebooks.org இணையதளம் : www.applebooks.org

அச்சாக்கம்: சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிட்

திருக்குறள் - இன்பத்துப்பால்

அன்புள்ளம் கொண்டோரே,

அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் நிறைவுசெய்து இன்பத்துப்பால் வெளியிடும் முயற்சி இது. வெண்பா வடிவில் விளக்கங்களைக் கொடுத்துள்ளேன். 1330 குறள்களுக்கும் வெண்பாப் பாங்கில் முயன்றது, எங்கள் மணிவிழா ஆண்டின் சாதனைத்துளி ஆகும். வெண்பாப் பாங்கில் கருத்துக்களைத் தொகுக்கப் பயன்படுத்திய நூல்கள்:

1. திருக்குறள் - கலைஞர் உரை

2. திருக்குறள் உரையுடன் - பேராசிரியர் சாலமன் பாப்பையா

3. திருக்குறள் மூலமும் உரையும்- புலவர் நாகசண்முகம்

4. திருக்குறள் உரை வளம் - புலவர் அருணா பொன்னுசாமி

5. திருக்குறள் அமுதமொழி - டாக்டர். சேயோன்.

அறிஞர்களின் கருத்துக்களை உள்வாங்கும் முயற்சியில் வெற்றிபெற்றேனா என்பதை வாசகர்கள் தான் கூறவேண்டும். இது ஒரு இமாலய முயற்சி. என்னால் இயன்றவரை முயற்சி செய்திருக்கின்றேன். உங்கள் வாழ்த்துகளையும் ஆசிகளையும் நாடுகின்றேன்.

- தங்கள் நட்பிற்கினிய
மதுரை பாபாராஜ்

பேராசிரியர் முனைவர் மகாகவி
அர.சிங்காரவடிவேலன் (எ) அரசி
8, மீனாட்சி அரங்கம், வ.உ.சி.தெரு,
கண்டனூர்-630 104
கைபேசி : 94420 48272

குன்றில் எடுத்த கொடி

1. பாப்பா எனச்சொன்னால் பாவரசன் வெண்பாவாம்
பூப்போல வெண்பாப் புனையரசர்;- பாப்பாராஜ்
வென்ற குறள்விளக்கும் வெண்பா உரைதமிழாம்
குன்றில் எடுத்த கொடி.

2. கற்பித்தேன் செந்தமிழைக் கற்றார் இவர்திறன்
மெய்ப்பிக்கும் வெண்பா விளக்கவுரை;- முற்புலவர்
பத்தாம் உரைக்குள் பரிமேல் அழகுரைபோல்
எத்திசையும் போற்றும் இனி.

3. மூலம் திருக்குறளும் முத்தமிழாம் தாய்மொழியும்
ஞாலத்தால் நாவில் நடக்கு வரை;- பாலனவர்
பாப்பாராஜ் நாவளர்ந்த பாவுரையும் கற்பவர்நா
தோப்பாக வாழ்க தொடர்ந்து.

- அன்பன்
அரசி

SRI-LA-SRI. A.V. SHANTHI KUMARA SWAMIGAL
34, Palaami Enclave, Shaswath Homes,
New Natham Road, Madurai - 625 014.

வாழ்த்துரை

இரு உள்ளங்கள் அன்பை உணர்ந்து, மகிழ்ந்து, அனுபவிக்கும் அகநிலையை விளக்கும் திருக்குறளின் இன்பத்துப்பாலை, 'ஒரு நாடகக் காவியம்' என்பர் அறிஞர். உவமைத் திறமும், கற்பனை வளமும், கவிதை இன்பமும் சிறந்து விளங்கும் இன்பத்துப்பாலில் 'திருக்குறளின் அறம்' முகைமொக்குள் உள்ள மணம் போல மணக்கிறது.

பகுத்துண்டு வாழும் வாழ்வாகிய அறத்தை, 'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை' என்று 'இல்வாழ்க்கையில்' கூறிய வள்ளுவர்,

'தம்இல் இருந்து தமது பாத்து உண்டு அற்றால்' என இன்பத்துப்பாலில் வலியுறுத்துவார். தன் தலைவியைத் தழுவி தலைவன் அடையும் மகிழ்ச்சியை, 'தம்முடைய இல்லத்தில் இருந்து தம்முயற்சியால் ஈட்டிய பொருளை பலர்க்கும் பகுத்து கொடுத்து உண்டாற் போன்றது' என்று ஒப்பிட்டு வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளை உணர்த்துகிறார்.

'அறிதொறும் அறியாமை கண்டு அற்றால்' என்னும் குறளில், 'ஞானத்தின் மிகச்சிறந்த நிலையை, அறிவிற்கு எல்லை இல்லை என்னும் நிலையை' எடுத்துக் கூறும் புதிய அறம், இன்பத்துப் பாலில் மட்டுமே கூறப்படுகின்றது.

'உடம்பொடு உயிர்இடை என்னமற்று அன்ன' என்பதில், அத்துவிதத்தின் ஒன்றாதல் நிலையையும், 'நெஞ்சே! அகத்தில் தலைவர் இருக்க, அஃது அறியாது நீ அவரை நினைத்து, புறத்தே தேடிச்செல்வது யாரிடத்து'

'உள்ளத்தார் காதலவர் ஆக உள்ளநீ
யார்உழைச் சேறிஎன் நெஞ்சு'

என்று கூறுமிடத்து, 'நாதன் உள்ளிருக்கும்' சித்தர் தத்துவத்தையும் காணலாம்.

நிற்க! 'என்றும் சீர் இளமைத் திறம்' கொண்ட இன்பத்துப் பாலின் பொழிவுகளை எல்லாம் வாரி, பெருக்கி, தம் வெண்பாவில் வளப்படுத்தியிருக்கின்றார் என்னருமைக் கவிஞர். பாபாராசு.

'நனவென ஒன்றில்லை ஆயின் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்' என்னும் குறளுக்கு,

''நினைவெனும் தூரிகை என்றன் கனவின்
புனைவை அழிக்கவில்லை என்றால்- கனவிலே
சந்தித்த காதலர் நீங்கிப் பிரியாமல்
இன்பநிலை கண்டிருப்போம் சொல்'

என்பது வெண்பாவில் பாபா வரைந்த 'வெண்பா' ஓவியம். தலைவியின் காதல் ஒழுக்கம் பற்றி ஊர்மகளிர் வாய்க்குள் பேசிக்கொள்வது 'அம்பல்' எனவும், வெளிப்படையாகப் பேசிக் கொள்வது 'அலர்' எனவும் பெயர்பெறும்.

'மன்றல் கனிந்தே மணம்பரப்ப வாய்ப்பைத் தந்தே' (குறள் 1143) எனும் வரிகளில், 'அலர்மணம்', காதலர் மணம் முடிக்க வாய்ப்பாக அமைகிறது என்பது குறளின் பொருட்பொழிவில் புதுப் பொலிவாக மிளிர்கிறது.

'காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று'

என்னும் குறளுக்கு, குவளை மலர்கள் தலைவியின் கண்களுக்கு ஈடாக மாட்டோம் என்று கருதி, நாணி, அதனால் தாழ்ந்து நிலம் பார்க்கும் என்பது பொருள். இதற்கு,

'குவளை மலர்களால் காண முடிந்தால்
இவளது கண்களைப்போல் இங்கே- அழகிய
கண்கள் நமக்கில்லை என்றேதான் ஏங்கியே
மண்நோக்கி நிற்கும் தவித்து'

என்று பாடுகிறார் பாபா. இங்கு 'ஏங்கியே மண்நோக்கி நிற்கும் தவித்து' என்னும் வரிகள், உளவியல் பாங்கில் பொருளை இன்னும் அடர்த்தியாகச் சுட்டுவதைக் காணலாம்.

'வெண்ணிலவில் கண்சிமிட்டும் ஓர்மறு' (1117), 'வேடமற்ற என்விழிகள்' (1170), 'பசப்பிற்கு அடக்கமே இல்லை' (1182), 'விதையற்ற நற்கனி கிடைத்தால், புதையல்தான் காதல் வாழ்வு' (1191), 'நினைக்கத் தொடங்கி நினைக்காமல் விட்டே இணைப்பை விடுவாரோ' (1203), 'காதலர் ஊடிப் பிரிவது போல வளையல்கள் ஊடிக் கழன்றன' (1234), 'காற்றைப் புறக்கணிப்போம் நாம்' (1268) எனவரும் வரிகளில், குறளின் கருத்துக்களில் 'செவ்வி தலைப்பட்டு' புதுத்தடம் காட்டுகின்றார் பாபா.

அருமை, எளிமை, அழகு கொண்ட திருக்குறளுக்கு மரபின் தொடர்ச்சியும், புதுமையின் வளர்ச்சியும் இணைந்தே புதிய பொருள்நலம் காட்டும் முயற்சியின் விளைவே இந்நூல். இம்முயற்சியில் பாபா வெற்றி பெற்றிருக்கிறார் என்றால் மிகையாகாது.

'இன்பநலம் கூட்டுகின்ற இல்லறத்து வாழ்க்கையை
இன்பப்பா லாய்தந்த இன்குறளை- தன்தமிழ்வெண்
பாவில் விரித்துரைத்த பாபா! சீர் செந்தமிழ் நின்
நாவில் நடம்புரியும் நின்று'

என இந்நூலை படைத்தளித்த பாபாவை வாழ்த்தி, இன்னும் இதுபோன்ற பல நூல்கள் படைத்து தமிழ் உலகிற்கு அளிக்க வேண்டும் என்று, சீரடி சாயிநாதனின் தாமரைத் திருவடிகளில் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கிறேன்.

- அன்புடன்
ஸ்ரீலஸ்ரீ அ.வே.சாந்திகுமார சுவாமிகள்

நன்றிக்குரிய இலக்கிய நெஞ்சங்கள்

மகாகவி அர. சிங்கார வடிவேலன் அய்யா அவர்கள்

காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரியில் 1970களில் பட்டப்படிப்பு படித்த நேரத்தில் எனக்குத் தமிழாசானாக அணி செய்தவர். காலம் நகர்த்திய காய்களானோம். 35 ஆண்டுகளுக்குப் பிறகு அண்மையில் மீண்டும் தொடர்பிழை தொடர்ந்து இந்த நூலில் ஆசியுரையை வெண்பாவாக வழங்கியுள்ளார். தள்ளாத வயதிலும் தமிழைத் தள்ளாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்த்தரு ''அரசி'' அய்யாவை வணங்கி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவரது ஆசிகள் இப்பிறவியில் எனக்குக் கிடைத்தற்கரிய பேறு என மதிக்கின்றேன்.

தவத்திரு ஸ்ரீலஸ்ரீ அ.வே. சாந்திகுமார சுவாமிகள்

20 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் நற்கூடல் இலக்கியத் கழகத்தின் நிகழ்ச்சி மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மதுரை தொழிற்கல்விக் கல்லூரியின் மாணவர் என்ற அறிமுகத்துடன் அறிமுகமாகி இன்று தவத்திரு சுவாமிகளாக வளர்ந்திருப்பவர். தொலைபேசித் தொடர்பில்தான் எங்கள் நட்பு தழைத்தது. இல்லத்தில் இல்லறத்-தைத் துறந்தவர். உள்ளத்தில் இன்பத் தமிழைத் துறக்கவில்லை. எனவே இந்த இன்பத்துப்பால் நூலுக்குத் தனது கருத்துரையைப் பொருத்தமாக ஆன்மீக உணர்வுடன் கலந்து வழங்கியிருக்கின்றார். இவரது தமிழாய்வின் எல்லை விரிந்து கொண்டே போகிறது. சீரடி சாய்பாபாவின் உண்மைத் தொண்டராகப் பரிணாமம் பெற்று பக்தகோடிகளுக்குத் தலைமைதாங்குபவராக மிளிர்ந்து கொண்டிருக்கின்றார். பல்கலைக் கழகங்களில் சொற் பொழிவு - கவியரங்கத் தலைமை - ஆன்மீகச் சொற்பொழிவுகள் என்று

பரபரப்பாக இருந்தாலும் எனது நூலுக்கும் கருத்துரை வழங்கிய தகைமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பதிப்பாளருக்குப் பணிவான நன்றி

உலகப்பொதுமறை எனப் போற்றப்படும் செந்தமிழ்ப் பெட்டகம் திருக்குறள். 1330 குறள்களுக்கும் வெண்பாப் பாங்கில் விளக்கம் எழுத அறத்துப்பாலுடன் அரும்பிய முயற்சி இந்த இன்பத்துப் பாலுடன் மலர்ந்து மணம் பரப்புகின்றது.

சென்னை மைக்ரோ பிரிண்ட்ஸ் இயக்குநர் நண்பர் நட்பிற்கினிய பண்பாளர் திரு. இராமு அவர்களும், ஆப்பிள் நிறுவனத்தின் அன்பு நண்பர் திரு. இராஜேஷ் அவர்களும் அளித்த நன்கொடை தான் இந்த நூல். ''இரா'' எழுத்தை ஏந்தும் நண்பர்கள் இருவரின் ஈடுபாடு இல்லையெனில் இந்த நூல் வந்தே இரா.இருவரின் மாசற்ற அன்பிற்கும் நட்பிற்கும் என்றென்றும் கடமைப் பட்டுள்ளேன்.

இந்தத் தேரை வடம்பிடித்து இழுத்த முயற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- மதுரை பாபாராஜ்

மதுரை பாபாராஜ் அறிமுகத் துளிகள்



பெயர் : சு.பெ. பாபாராஜ்

தந்தை : தெய்வத்திரு
சு. பெருமாள் முத்து சுப்பு

தாய் : தெய்வத்திரு. தேவகி முத்துசுப்பு

பிறந்த நாள் : 11.10.1948

மனைவி : பா. வசந்தா

கல்லூரி : அழகப்பா கலைக்கல்லூரி,
காரைக்குடி

பட்டம் : அறிவியல் இளவல் (பயிரியல்)

பொறுப்பு : முதுநிலை அலுவலர் (ஓய்வு)

பணிபுரிந்த நிறுவனங்கள் : பென்னர் (இந்தியா) லிட் மதுரை
BMF பெல்டிங்ஸ் லிட்,சென்னை.

மின்னஞ்சல் முகவரி : spbabaraj@gmail.com

ஊக்கச் சிறகுகள்

- பாரதியார் நூற்றாண்டு விழா - 1982 - புதுவை அரசின் பாரதி பட்டயம்.
- பாரதிதாசன் நூற்றாண்டு விழா - 1991 - தமிழக அரசு பாராட்டு
- (தமிழ் அரசி இதழ்) அமரர் ராஜீவ் காந்தி கவிதைப் போட்டி - மே - 1993 - முதல் பரிசு - மதுரை மாவட்டம்.
- மதுரை வானொலி நிலையம்
- மக்கள் தொலைக்காட்சி
- சென்னை வானொலி நிலையம்
- பொதிகை தொலைக்காட்சி

இதுவரை வெளிவந்துள்ள கவிதை நூல்கள்

1.	கவிச்சாரல்	:	1981
2.	கவியமுதம்	:	1984
3.	மகர விளக்கு	:	1985
4.	மரபுகளின் அருவி	:	1989
5.	மகிழம்பூ	:	1997
6.	கிளிஞ்சல்கள்	:	2002
7.	மகரயாழ்	:	2004
8.	அற்புதத் தரு	:	2005
9.	திருக்குறள் பேழை	:	2006
10.	திருக்குறள்	:	2008
11.	Reverberation	:	ஆங்கிலச் சொல்லோவியம்

பங்கேற்ற இலக்கிய அமைப்புகள்

நற்கூடல் இலக்கியக்கழகம் மதுரை,
கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் மதுரை,
உரத்த சிந்தனை - சென்னை,
வாசல் கவிதை அமைப்பு - சென்னை,
உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம் சென்னை.

கவிஞர் மதுரை பாபாராஜ் அவர்களுடன் எங்களது நட்பு மீனாட்சி திருமைந்தன் வி.என். சிதம்பரம் அவர்களின் அறிமுகத்தால் கனிந்தது.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த செந்தமிழ் நகர் மதுரை இவரது ஊர். பொதுவாக மனிதர்கள் பணிஓய்வு பெற்ற பிறகு ஓய்வில் அமைதிகாண விரும்புவார்கள். ஆனால் கவிஞர் அவர்கள் பணிஓய்வுக்கு பிறகும் மொழிபெயர்ப்பு, கவிதைப்பணி என இயங்கி வருகின்றார். இவருடைய அயராத முயற்சி இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது.

பல நூல்களைப் படித்து அதன் கருத்துக்களை உள்வாங்கி வெண்பாப் பாங்கில் 1330 குறள்களுக்கும் கவிதைகள் படைத்துள்ளார். படிப்பவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் கவிஞரின் கவிதைகள் உள்ளன.

இந்த முயற்சிக்கு நாங்கள் உறுதுணையாக இருக்கின்றோம்.

அன்பர்கள் இந்த நூலுக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் அன்பிற்கினிய
S. ராமு,
இயக்குநர்
சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிமிடெட்.

S. ராஜேஷ்,
இயக்குநர்
ஆப்பிள் பப்ளிஷிங் இன்டெர்னேஷனல் (பி) லிமிடெட்.

109. தகை அணங்குறுத்தல்

1081. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.

அளவில் பெரிய அழகான தோடை
வளமாய் அணிந்துவரும் மங்கை- அழகு
மயிலோ! அழகின் அழகியோ? தெய்வ
எழிலோ! மயங்குதென் நெஞ்சு;

1082. நோக்கினான் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு தானைக்கொண் டன்ன துடைத்து.

தாக்கிய வேல்விழியை நோக்கினேன்! மீண்டுமென்னை
நோக்கித்தான் தாக்கினாள்! தானொருத்தி- தாக்குவது
போதாதென் றேதான் படையுடன் வந்ததுபோல்
வேகமாய்த் தாக்கியது காண்.

1083. பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன் பெண்டகையால் பேரமர்க் கட்டு.

எமனைநான் பார்த்ததில்லை! ஆனாலும் அந்த
எமனென்போன் பெண்ணுருவில் தாக்கும்- சமர்க்கள
வேல்விழிகள் கொண்டவன்தான் என்றே புரிகிறது!
கோளும் நடுங்கிடும் கூறு.

1084. கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப் பேதைக் கமர்த்தன கண்.

பெண்மையும் மென்மையும் ஒன்றுபட்ட இப்பெண்ணின்
கண்களோ பார்த்தோர் உயிர்பறிக்கும் - என்பதுபோல்
அமைந்துள்ள கோலத்தால் இந்த அமைப்பளிக்கும்
மாறுபாடு ஏனோ? விளம்பு.

1085. **கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
நோக்கமிம் மூன்றும் உடைத்து.

உயிரைப் பறிக்கும் எமனோ? தழுவும்
விழியோ? மருள்கின்ற மானோ? - தவித்திருக்கும்
ஏந்திழையாள் பார்வையில் இம்மூன்று கேள்விகளும்
ஏந்திவரும் கோலமுண்டு சொல்.

1086. **கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்**
செய்யல மன்னிவள் கண்.

வளைந்த புருவங்கள் நேராக நின்றே
அழைக்கும் விழிகளின் மீது- விழுந்து
மறைத்திருந்தால் நான்நடுங்கும் துன்பத்தை இங்கே
இறைக்கா திருக்கும் உணர்.

1087. **கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்**
படாஅ முலைமேல் துகில்.

மதம்பிடித்த யானையின் நெற்றி அணிந்த
முகப்படாம் போல அணங்கின்- அடங்காத
மார்பின்மேல் ஆடை இருக்கின்ற கோலமாம்!
ஈர்த்திடும் நெஞ்சத்தை இங்கு.

1088. **ஒண்ணுதற் கோ�ஒ உடைந்ததே ஞாட்பினுள்**
நண்ணாரும் உட்குமென் பீடு.

வளையாத வாள்பிடித்தே அஞ்சாமல் போரில்
நிலைகுலைய வைப்பேன் பகையை- நிலைகுலைந்தேன்
காதலியின் நெற்றியைப் பார்த்தேன்! வளைந்து விட்டேன்!
மாதரசி வென்றுவிட்டாள் காண்.

1089. **பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்
கணியெவனோ ஏதில் தந்து.**

பெண்மானைப் போலத்தான் பேரச்சப் பார்வையும்
நங்கையின் உள்ளத்தில் நாணமும்- தங்கும்.
நகையாக ஏந்திவரும் நன்மகள் வேறு
நகையணிதல் ஏனோ? நவில்.

1090. **உண்டார்க னல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.**

மதுவை அருந்தினால்தான் இங்கே மயக்கம்
எடுத்தணைத்தே இன்பம் பெருக்கும்- தொடுக்கும்
விழிகளால் கண்டதுமே போதை மயக்கம்
பொழிகிறதே காதல்தான்! பார்.

110. குறிப்பறிதல்

1091. **இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.**

காதலியின் தூதுவிடும் பார்வை இருவகையாம்!
வேதனைக்கு வித்தூன்றும் ஒன்றென்றால்- காதல்நோய்
சோதனையைத் தீர்க்கும் மருந்தாகும் மற்றொன்று!
நாடறியும் காதலின் தூது.

1092. **கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது**

நானவளைப் பார்க்காத நேரத்தில் என்னைத்தான்
மானவளோ கள்ளத் தனமாக- தேனருவிப்
போன்ற அவள்பார்வை இன்பத்தில் பாதியன்று!
தூண்டல் அதற்கும்மே(ல்) ஆம்.

**1093. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.**

நான்காணா நேரத்தில் நங்கை எனைப்பார்த்தாள்!
தானோ தலைகுனிந்தாள் நாணத்தில்- தேன்மகளின்
பண்புதனைக் காதல் பயிர்வளர ஊற்றிய
தண்ணீராம் என்றிங்கே சாற்று.

**1094. யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்.**

நானுன்னைப் பார்க்கின்ற நேரம் நிலந்தன்னை
நாணலாய்த் தான்வளைந்தே பார்த்திருப்பாய்- மானுன்னைப்
பார்க்காத நேரத்தில் வேலெறிந்தே என்முகத்தைப்
பார்த்தே மகிழ்வாய் சிரித்து.

**1095. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.**

கண்ணை விரித்தேதான் நேராகப் பார்க்காமல்
கண்ணைச் சுருக்கியே பார்க்கின்ற - எண்ணத்தின்
கோலத்தில் என்னைத்தான் பார்த்திருப்பாள்! இன்புறுவாள்!
ஆழமான காதலே இஃது.

**1096. உறாஅ தவர்போற் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.**

அயலார்போல் சொற்சிலம்பக் கூத்தாடிப் பேசித்
துயரை விதைத்தாலும் அந்தக் - குலமகளின்
உள்ளத்தில் சுற்றிப் படர்ந்திருக்கும் பேரன்போ
வெள்ளமெனப் பாய்ந்துவரும் பார்.

**1097. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு.**

சினம்போல் தெறிக்கும் அனல்சொற்கள், இங்கே
கனன்றே பகைவரைப் பார்ப்பதுபோல் பார்வை,
புறத்தே அயலாராய் உள்ளத்தே அன்பை
மகத்தாக காட்டுவோரின் பண்பு.

**1098. அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.**

யாரோ, எவளோபோல் அந்தப் பதுமையோ
சேராமல் பேசினாலும் நானவளைப்- பார்த்ததும்
உள்ளம் நெகிழ்ந்தே முறுவலித்தாள்! அத்தகையத்
துள்ளலிலும் கொண்டாள் பொலிவு.

**1099. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.**

ஒருவர்க் கொருவர் தெரியா தவர்போல்
விருப்பின்றி பார்த்தே விரும்பும்- கரும்புக்
குறும்புகள் காதலர் நெஞ்சக் களத்தில்
உறுத்தாத மென்மலர்கள் தாம்.

**1100. கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.**

காதலனின் கண்களும் காதலியின் கண்களும்
தூதனுப்பிப் பேசிக் கலந்துவிட்டால்- காதலின்
பண்ணமைக்க வாய்ச்சொற்கள் என்னதான் மீட்டினாலும்
இங்கே பயனில்லை சொல்.

III. புணர்ச்சி மகிழ்தல்

**1101. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.**

பார்த்தலும், கேட்டலும், உண்ணலும், பூமணத்தைச்
சார்ந்தே முகர்தலும், தீண்டலும்- வேரோடும்
ஐம்புலன் இன்பங்கள் எல்லாமே இல்லறத்துப்
பெண்ணிடம் உள்ளன! பார்.

**1102. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.**

நோய்களைத் தீர்க்க மருந்துகள் இங்குண்டு!
சேயிழையாள் தூதுவிட்டுத் தொற்றவைத்த - நோயான
காதல்நோய் தீர்வதற்குத் தக்க மருந்தாக
காதலிதான் ஆவாள் விளம்பு.

**1103. தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.**

தாமரைக் கண்ணன் உலகமென்று சொல்கின்றார்!
பூமணக்கும் காதலியின் தோள்களில் - கோமகனோ
தூங்கும் இனிமையைக் காட்டிலும் இன்சுவை
ஏந்திடுமோ அவ்வுலகம் சொல்.

**1104. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.**

என்னைவிட்டு நீங்கினால் இங்கே சுடுகிறதே!
என்னை நெருங்கினால் இன்பத்தில்- நன்கு
குளிரவைக்கும் தீயைக் குணவதியோ என்னுள்
உலவவைக்க எங்குபெற்றாள் இங்கு.

1105. வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

விரும்பும் பொருளோ விரும்புகின்ற நேரம்
தருகின்ற இன்பத்தைப் போல- பெருகிவரும்
தேனளிக்கும் பூமுடித்தாள் தோள்கள் பொழிகின்ற
ஊனமுத இன்பங்கள் தாம்.

1106. உறுதோ றுயிர்தளிப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்.

முத்தழகுச் சித்திரத்தைத் தொட்டணைக்கும் நேரமெல்லாம்
புத்துணர்ச்சி பெற்றேதான் என்னுயிரோ- முற்றும்
தளிர்க்கிறதே! இம்மங்கைத் தோள்கள் அமிழ்தால்
பிழிந்தெடுத்து செய்தவையோ? சொல்.

1107. தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

தன்னுழைப்பால் சேர்த்ததை இங்கே பலருக்கும்
தந்து பகிர்ந்துண்ணும் இன்பமோ - என்னவளைக்
கூடுவதால் கூடுகின்ற இன்பத்திற்(கு) ஒப்பாக
பாடுதம்மா வாழ்த்துப்பா! பார்.

1108. வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

காற்றுகூட உள்ளே நுழைய முடியாமல்
ஊற்றெடுக்கும் இன்பம் பெறுவதற்கே - ஏக்கமுடன்
சேர்ந்தே அணைத்திருக்கும் கோலம்; காதலிப்போர்
வாழ்த்தும் இனிமைதான்! சொல்.

1109. **ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
கூடியார் பெற்ற பயன்.

ஊடல் விதைப்பதும் அந்த விளைச்சலில்
கூடல் தழைக்கப் புணர்வதும்- தேடலில்
இணைந்து மயங்குவதும் இல்லற வாழ்வில்
இணையர் சுவைக்கும் பயன்.

1110. **அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்**
செறிதோறும் சேயிழை மாட்டு.

நூல்களைக் கற்றால் அறியாமை நீங்குகின்ற
வாழ்வியலைப் போல அணிகலன்கள்- தாலாட்டும்
மங்கைதரும் இன்பத்தின் தேன்சுவையும் இங்கெனக்கோ
என்றும் புதியனதான் சொல்.

112. நலம் புனைந்து உரைத்தல்

1111. **நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்**
மென்னீரள் யாம்வீழ் பவள்.

அனிச்ச மலரே! மலர்களில் எல்லாம்
தனிச்சிறப்பு மென்மை உனக்கே! - கனித்தமிழால்
வாழ்த்துகின்றேன்! ஆனாலும் என்னவளின் மென்மைமுன்
தாழ்ந்து தலைகுனிவாய் நீ.

1112. **மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்**
பலர்காணும் பூவொக்கும் என்று.

மலர்களைக் கண்டு மயங்குகின்ற நெஞ்சே!
மலரரசி என்னவளின் துள்ளும்- அழகிய
கண்களைப் பார்த்தாயா? பார்வியக்கும் தேன்மலராய்க்
கண்கள் திகழ்கின் றன.

1113. **முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு

மேனி இளந்தளிர்! பற்களோ முத்து!
பூமணம் தூவி மயக்கமூட்டும்!- பா மணச்
சந்தமெனந் துள்ளும் வேல்விழி கொண்டவள்
என்மனக் காதலிதான் பார்.

1114. **காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்**
மாணிழை கண்ணொவ்வேம் என்று.

குவளை மலர்களால் காண முடிந்தால்
இவளது கண்களைப்போல் இங்கே- அழகிய
கண்கள் நமக்கில்லை என்றேதான் ஏங்கியே
மண்நோக்கி நிற்கும் தவித்து.

1115. **அணிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
நல்ல படாஅ பறை

அணிச்சமலர்க் காம்புதன்னை நீக்காமல் மங்கை
அணிந்தாள் தலையில்! இடுப்போ- தணிந்தேதான்
நொந்ததே அச்சுமை தாங்காமல்! மங்கலம்
பொங்குமொலி இங்கில்லை சொல்.

1116. **மதியும் மடந்தை முகனும் அறியா**
பதியின் கலங்கிய மீன்.

நிலவையும் மங்கை முகத்தையும் கண்டு
கலங்கி மயங்கிய நட்சத் திரங்கள்
தயங்கித் தயங்கியே வேறுபாடு காண
இயலாமல் தத்தளிக்கும் காண்.

1117. **அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
மறுவுண்டோ மாதர் முகத்து.

விண்மீன்கள் ஏன்கலங்க வேண்டும்? வெண்ணிலவில்
கண்சிமிட்டும் ஓர்மறுபோல் காரிகையின்- பொன்முகத்தில்
ஏதேனும் உண்டோ? எனக்குப் பொறுமையில்லை!
சோதிக்க வேண்டாமே! சொல்.

1118. **மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
காதலை வாழி மதி.

முழுமதியே! என்மனைவி நல்லாள் முகம்போல்
முழுஒளி பெற்றுத் திகழ்ந்தால்- தழுவிடும்
என்காதல் தேன்மழை உன்மீது! சொல்கின்றேன்!
என்னவள் என்னவள்தான்! பார்.

1119. **மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்**
பலர்காணத் தோன்றல் மதி.

வெண்ணிலவே! உன்முகம் என்மனைவி ஏந்துகின்ற
தண்முகம்போல் உள்ளதென்றே எண்ணுகின்றாய்- எண்ணத்தில்
வெற்றிபெற வேண்டுமெனில் பாரில் பலர்காண
எத்திசையும் தோன்றாதே! போ.

1120. **அனிச்சமும் அன்னத்தின் தூவியு மாதர்**
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

மென்மை எனிலோ அனிச்ச மலரிதழும்
அன்னப் பறவைச் சிறகுந்தான்- என்மனைவி
பாதங்கள் மீது விழுந்தால், நெருஞ்சியாய்
வேதனையைத் தந்துவிடும் சொல்.

113. காதற் சிறப்புரைத்தல்

**1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி னூறிய நீர்.**

இனியமொழி பேசும் மனைவியின் வெண்மைப்
பனிபோன்ற பற்கள் இடையே- கனிந்தே
சுரக்கின்ற நீரோ பாலோடு தேனைக்
கலந்த கலவைதான் காண்.

**1122. உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.**

உயிர்த்தனி யாக உடல்தனி யாக
துளிர்த்துத் தழைப்பதில்லை வாழ்வில்- எழில்நங்கை
என்னுடன் ஏந்தும் உறவும் அதுபோல்தான்!
என்றும் பிரிவில்லை! சொல்.

**1123. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம்.**

கண்ணின் கருமணியில் காரிகை வந்தமர
என்னிடத்தை நான்தர வேண்டுமிங்கே- கண்மணிப்
பாவையே! பொன்மகள் தங்க இடமளித்து
தாவியே சென்றுவிடு நீ.

**1124. வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து.**

கூடுகின்ற நேரம் மனைவி உயிர்போல
நாடும் உடலுடன் சேர்கின்றாள்- கூடிப்
பிரிகின்ற போதோ உயிரே உடலைப்
பிரிவதுபோல் ஏங்குகிறேன் பார்!

1125. **உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்**
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

மனங்கவர்ந்த என் மனைவி பண்புகளை நானோ
நினைப்பதில்லை ஏனெனில் நெஞ்சில்- தினையளவும்
அன்னத்தை நான் மறந்த தில்லை! மறந்தால்தான்
இங்கே நினைக்கவேண்டும்! நான்.

1126. **கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்**
நுண்ணியர்எம் காத லவர்.

என்னன்பர் கண்ணுள் இருந்தேதான் போகமாட்டார்!
என்னிமைகள் இங்கே இமைத்தாலும்- துன்பப்
படமாட்டார்! அந்த அளவுக்கு நுட்பத்
திறன்படைத்த ஏந்தல் அவர்.

1127. **கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
எழுதேம் கரப்பாக் கறிந்து

கண்களுக் குள்ளேயே காதலர் வாழ்வதால்
கண்ணிலே மைதீட்டும் நேரத்தில்- அன்பர்
மறைவாரோ என்றேமை தீட்டமாட்டேன்! நான்தான்!
சிறையில் மகிழ்வார் அவர்.

1128. **நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**
அஞ்சுதும் வேபாக் கறிந்து.

என்னவர் என்றென்றும் என்நெஞ்சில் வாழ்வதால்
உண்ணுதற்கே அஞ்சுகின்றேன்! உண்டாலோ- மன்னவனைச்
சுட்டுவிடும் என்றே துடிக்கின்றேன்! தென்றலே
இப்படித்தான் என்மயக்கம்! இங்கு.

1129. **இமைப்பிற் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே**
ஏதிலர் என்னுமிவ் வூர்.

கண்ணுக்குள் உள்ள அவர்மறைவார் என்றேதான்
கண்ணை இமைப்பதில்லை நானிங்கே- மன்பதையோ
தூக்கமற்ற என்நிலைக்கோ என்னவரைச் சாடுகின்றார்!
தூற்றுகின்றார்! பாவம் அவர்.

1130. **உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்**
ஏதிலர் என்னுமிவ் வூர்.

என்னவர் எப்போதும் என்நெஞ்சில் வாழ்கின்றார்!
இந்த நிலையறியா சுற்றத்தார்- எங்களைப்
பார்த்து, பிரிந்தேதான் வாழ்வதாக வீண்பழி
வேலெறிந்து பார்ப்பதேன்? சொல்.

114. நாணுந் துறவுரைத்தல்

1131. **காமம் உழந்து வருந்தினார்க் கேம**
மடலல்ல தில்லை வலி.

கனிந்துவிட்ட காதலில் வெற்றிபெற எண்ணும்
துணிச்சலுக்குப் பாதுகாப்பாய் இங்கே- மனதார
காதலன் நின்று மடலேறும் காட்சிதான்
காதலுக்கு சாட்சியாகும் பார்.

1132. **நோனா உடம்பும் உயிரும் மடலேறும்**
நாணினை நீக்கி நிறுத்து.

காதலியை விட்டுப் பிரிந்திருக்கும் இவ்வுடலும்
வேதனையில் தத்தளிக்கும் இவ்வுயிரும்- சோதனையை
வெற்றிகாண நாணத்தை விட்டே மடலேற
முற்றும் துணிந்துவிட்டேன் நான்.

1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன் காமுற்றார் ஏறும் மடல்

ஆண்மையும் நாண உணர்வும் மிளிர்ந்திருக்க
ஆண்மகனாய் வாழ்ந்திருந்த நானின்று- தேன்மகளின்
காதலை ஊருக்குச் சொல்ல மடலேறி
தூதனுப்பி நிற்கின்றேன்! சொல்.

1134. காமக் கரும்புனல் உய்க்குமே நாணொடு நல்லாண்மை என்னும் புணை

மங்கையின் நாணமும் மன்னவனின் ஆண்மையும்
பண்பு நதியின் படகுகளாம்- என்புருகும்
காதலெனும் வெள்ளமோ கண்முன் படகுகளை
வேகமாகக் கொண்டுசென்ற தே.

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு மாலை உழக்கும் துயர்.

மாலை மலர்கின்ற காதலென்னும் நோயையும்
காளை எனக்கந்த நோய்தீர்க்கும் மாமருந்தின்
வேராம் மடலேறும் வாய்ப்பையும் மெல்லிய
சீர்வளையல் சேயிழைதந் தாள்.

1136. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மற்ற படலொல்லா பேதைக்கென் கண்.

காதலியை எண்ணியெண்ணி கண்கள் உறங்கவில்லை!
வேதனைத் தீயிலே வெந்துழன்று- நேசமுடன்
நள்ளிரவில் கூட மடலூர்தல் பற்றியே
உள்ளுகின்றேன்! வாடுகின்றேன்! பார்.

1137. **கடலன்ன காமம் உழந்தும் மடலோறப்**
பெண்ணிற் பெருத்தக்க தில்.

சீறும் கடலலையாய்க் காதல்நோய் துன்புறுத்தி
ஊடுருவி ஏங்கவைத்த போதுமிங்கே- பாடுபொருள்
ஏந்திழையோ மடலேறும் எண்ணமின்றி வாழ்கின்றாள்!
மாண்புதனை என்னென்பேன்! நான்.

1138. **நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்**
மறையிறந்து மன்று படும்.

மனஅடக்கம் மிக்கவள்; நாளும் இரக்கம்
வணங்கும் பெருந்தன்மை கொண்ட- அணங்குதான்
என்றெல்லாம் எண்ணாமல் காதல், ரகசியத்தை
மன்றத்தில் போட்டுடைக்கும் பார்.

1139. **அறிகிலார் எல்லாரும் என்றேயென் காமம்**
மறுகின் மறுகும் மருண்டு.

என்காதல் யாருக்கும் இங்கே தெரியாமல்
என்னுள் இருப்பதால் ஊரெல்லாம்- நன்கு
தெரியவேண்டும் என்பதற்கு இத்தெருக்கள் தோறும்
திரிகிறதோ? காதல்! இயம்பு

1140. **யாம் கண்ணிற் காண நகுப அறிவில்லார்**
யாம்பட்ட தாம்படா ஆறு.

காதல்நோய் கட்டவிழ்க்கும் துன்பத்தில் சிக்காதோர்
நாடறிய எள்ளி நகைக்கின்றார்- கூடழியத்
துள்ளவைக்கும் காதல் விலங்கை அணிந்திருந்தால்
எள்ளி நகைப்பாரோ? சொல்.

115. அலர் அறிவுறுத்தல்

1141. அலர்எழ ஆருயிர் நிற்கும்; அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்.

எங்களது காதலைப் பற்றிப் பேசுவதால்
என்னுயிர் தங்கி உலவுதம்மா- இம்மக்கள்
இங்கே இதனை அறியார்! இதுநானோ
இங்குசெய்த பாக்கியந் தான்.

1142. மலரன்ன கண்ணாள் அருமை அறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

மலர்விழிக் காதலியைச் சந்திக்கும் வாய்ப்பு.
மலரவில்லை! இவ்வூரார் எங்கள்- உளங்கனிந்த
காதலைப் பேசியே எங்களுக்கு நன்மையைத்
தூதனுப்பிப் பூக்கவைத்தார்! சொல்.

1143. உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

எங்களுக்குள் காதல் இருந்ததை ஊராரோ
தங்களுக்குள் பேசியதும் நல்லதுதான்- மன்றல்
கனிந்தே மணம்பரப்ப வாய்ப்பைத் தந்தே
துணியவைத்தார் மாந்தர்தான்! சொல்.

1144. கவ்வையால் கவ்விது காமம்; அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

எல்லோரும் பேசுவதால் எங்களது காதலோ
தெள்ளத் தெளிவாய் வளர்கிறது- இல்லை
எனிலோ பரபரப்பே இன்றிச் சுவையின்
தனித்துவம் அற்றிருக்கும்! சாற்று.

1145. **களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்**
வெளிப்படுந் தோறும் இனிது.

கள்ளைக் குடித்து மயங்கித் திளைப்பதில்
கள்ளை விரும்பும் நிலைபோல- உள்ளம்
மயங்கிடும் காதலை ஊரார்கள் பேசும்
அலரில் மகிழும் மனம்.

1146. **கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
திங்களைப் பாம்புகொண் டற்று.

நானவரைச் சந்தித்துப் பேசியதோ ஓர்நாள்தான்!
தேனமுதப் பால்நிலவைப் பாம்பொன்றே- ஆனமட்டும்
கவ்விப் பிடித்ததுபோல் ஊர்முழுக்க இச்செய்தி
துள்ளிப் பரவியதே! பார்.

1147. **ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்**
நீராக நீளுமிந் நோய்.

ஊர்மக்கள் பேசும் பழிச்சொல் எருவாக
தாயுரைக்கும் தீக்கனல் சொற்களோ நீராக
வேரூன்ற வைத்தேதான் காதல் வளர்ந்துவரும்!
பேரழிவில் வீழாது காண்.

1148. **நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**
காமம் நுதுப்பேம் எனல்.

தழைக்குமெங்கள் காதலைத் தங்களது பேச்சால்
அழித்திடுவோம் என்றெண்ணும் போக்கோ - வழிந்தோடும்
நெய்யூற்றி இங்கே நெருப்பை அணைத்திடும்
செய்கைபோல் உள்ளதென்று செப்பு.

1149. **அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்**
பலர்நாண நீத்தக் கடை.

மற்றவர்கள் நாணுகின்ற வண்ணம் பிரியமாட்டேன்,
சற்றும்நீ அஞ்சாதே என்றுரைத்துச் சென்றார்!
உற்றவரும் ஊராரும் தூற்றும் அலர்கேட்டு
இக்கணம் நாணுவதோ? நான்.

1150. **தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்**
கௌவை எடுக்குமிவ் வூர்.

நான்விரும்பும் செய்தியை வைத்தேதான் தூற்றுகின்றார்!
தேன்மொழியாள் என்மனத்தின் காதலனும்- நான்விரும்பும்
வண்ணம் மணம்புரிய முன்வருவார்! இவ்வலரோ
நன்மைக்கே வித்தூன்றும்! சொல்.

116. பிரிவு ஆற்றாமை

1151. **செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
வல்வரவு வாழ்வார்க் குரை.

பிரிவதில்லை என்றால்நீ என்னிடத்தில் சொல்க!
விரைவிலே வந்திடுவேன் என்றே- உரைப்பதை
எல்லாம் நீதிரும்பும் நாளில் உயிருடன்
உள்ளோ ரிடத்திலே சொல்.

1152. **இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்**
புன்கண் உடைத்தால் புணர்வு.

விழிகளால் பார்த்தாலே இன்பத்தில் நெஞ்சம்
கழிபே ருவகையில் துள்ளும்- களித்தேதான்
தீண்டுகின்ற நேரத்தில் பிரிந்திடுவார் என்பதோ
தூண்டுதடி துன்பத்தை இங்கு.

1153. **அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்**
பிரிவோ ரிடத்துண்மை யான்.

பிரிவின் கொடுமையை அன்பர் அறிவார்!
பிரிவும் மலரத்தான் செய்யும்- பிரிந்திடேன்
என்றே அவர்தான் சொல்கின்றார்! என்னென்பேன்?
நம்ப முடியவில்லை நான்.

1154. **அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்**
தேறியார்க் குண்டோ தவறு

பயப்படாதே! உன்னைப் பிரியமாட்டேன் என்றே
நயமுடன் சொன்னவர் இன்றே- விலகிப்
பிரியும் நிலையெடுத்தால் சொன்னதை நம்பி
உலவியது குற்றமா? சொல்.

1155. **ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்**
நீங்கின் அரிதால் புணர்வு

என்னைத்தான் பாதுகாக்க வேண்டுமென்றால் இங்கேயோ
என்னவர் நீங்காமல் காக்கவேண்டும்- என்னுயிர்
வாடப் பிரிந்துவிட்டால் மீண்டும் அவரிடம்
கூடலில் சேர்தல் அரிது.

1156. **பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின், அரிதவர்**
நல்குவர் என்னும் நசை.

'சென்று வருகிறேன்' என்றுரைக்கும் கல்நெஞ்சம்
கொண்டவரின் இந்தப் பிரிவினால்- துன்பத்தைத்
தாங்க முடியாத என்மீதோ அன்புகொள்வார்.
ஈங்கென்றே ஏங்குதல் தப்பு.

1157. **துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை**
இறைஇறைவா நின்ற வளை.

தலைவன் பிரிவுத் துயரத்தை முன்கை
வளையல் கழன்று விழுந்தே- உளைச்சலை
ஊரறியத் தூற்றித் தெரிவித்தே ஓடுமே!
சாரமற்ற சக்கைதான் நான்.

1158. **இன்னா தினன்இல்லூர் வாழ்தல் அதனினும்**
இன்னா தினியார்ப் பிரிவு.

உறவுகள் இல்லாத ஊரிலே வாழ்தல்
படரவைக்கும் துன்பத்தை என்றும்- அகத்தை
இதைவிடத் தாக்கியே சீரழிக்கும் அன்பர்
விதைக்கும் பிரிவின் துயர்.

1159. **கொடிற்சுடின் அல்லது காமநோய் போல**
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

துள்ளுகின்ற தீநாக்குத் தொட்டவரைத் தான்சுடும்!
உள்ளத்தின் காதல்நோய், உற்றவரை- மெள்ள
அகன்றாலும் அம்மா அனலாய்ச் சுடுமோ?
தகிப்பதைத் தாங்கவழி சாற்று.

1160. **அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப், பிரிவாற்றிப்**
பின்இருந்து வாழ்வார் பலர்.

பிரிவதற்கு சம்மதித்தும், அந்தத் துயரில்
சரிந்து விடாமல் பொறுத்தும்- உயிருடன்
வாழ்கின்ற பெண்கள் இங்கே இருக்கின்றார்!
தேய்ந்தே தவிக்கின்றேன் நான்.

117. படர்மெலிந் திரங்கல்

1161. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க் கூற்றுநீர் போல மிகும்.

இறைக்க இறைக்கப் பெருகிவரும் ஊற்றில்
தடையின்றி நீர்தான்! அதுபோல்- மறைக்க
மறைக்கப் பெருகிவரும் காதல்நோய்! கண்ணே!
நடைமுறை இவ்வுலகில் பார்.

1162. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க் குரைத்தலும் நாணுத் தரும்.

காதலென்னும் நோய்தன்னை என்னால் மறைத்திடத்
தோதாய் வழியுமில்லை! காதலுக்குத்- தூதுவிட்டுத்
தூண்டிலிட்ட காதலனைப் பார்த்தே உரைத்திட
நாணம் தடுக்கிறதே! பார்.

1163. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென் நோனா உடம்பின் அகத்து.

காதலென்னும் நோயோ ஒருபுறமும், வேதனையைத்
தூதனுப்பிச் சொல்ல முடியாமல்- சோதிக்கும்
நாணம் மறுபுறமும் காவடிபோல் தொங்கவைத்தே
ஊனகத்தைச் சீண்டுதடி! சொல்.

1164. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும் ஏமப் புணைமன்னும் இல்.

காதல் அலைகள் எழுந்தெழுந்து துள்ளித்தான்
மோதிக் கடல்போல சூழ்ந்தேதான்- சீறி
வருத்துதடி! இந்தக் கடல்தன்னை நீந்திக்
கரைசேரத் தோணியில்லை! காண்.

1165. துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

இன்பத்தை ஏந்திவரும் ஈடற்ற நட்புறவில்
துன்பத்தைச் சீண்டித்தான் தூண்டுகின்றார்- இன்னும்
இவரோ பகையுறவில் என்னதான் செய்வார்?
புவியே! செவியில் புகல்

1166. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

காதல் விதைக்கின்ற இன்பம் கடல்போல்
மாதே! பெரிதாகத் தோன்றுதடி- வேதனையை
நாட்டும் பிரிவுத் துயரமோ அக்கடலைக்
காட்டிலும் இங்கே பெரிது.

1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

காதலென்னும் துன்பக் கடலின் கரைகாணும்
சோதனையில் தோற்றுக் கலங்குகின்றேன்- வேதனை
ஒன்றே துணையாக நள்ளிரவில் தூங்காமல்
தன்னந் தனியானேன்! சாற்று.

1168. மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை

உலக உயிரினங்கள் எல்லாம் உறங்க,
இரவே! துணைபுரிந்தாய்! நீயோ- உலகில்,
எனைத்தவிர வேறுதுணை இங்கே உனக்குத்
துணையாக யாருமில்லை! பார்.

1169. **கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்**
நெடிய கழியும் இரா.

இரவுப் பொழுதோ நெடும்பொழுதாய் நீண்டு
வளர்வது போன்ற கொடுமை- கலங்கவைக்கும்
காதல் பிரிவுக் கொடுமையைக் காட்டிலும்
மாதே! பெரிதென்றே சொல்.

1170. **உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்**
நீந்தல மன்னோவென் கண்.

காதலர் உள்ள இடத்திற்கோ என்மனம்போல்
வேகமாய்ச் செல்கின்ற வாய்ப்புதனை- வேடமற்ற
என்விழிகள் பெற்றேதான் சென்றுவிட்டால் வெள்ளமாம்
கண்ணீரில் நீந்தாது! பார்.

118. கண் விதுப்பழிதல்

1171. **கண்டாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்**
தாங்காட்ட யாங்கண் டது

என்னவரைக் காட்டி இதயத்தில் காதல்நோய்
துன்பத்தைத் தந்ததே கண்கள்தான் - கண்களோ
இயன்றவரைக் காட்டுமாறு என்னைத்தான் துன்புறுத்தி
கண்ணீரைச் சிந்துவதும் ஏன்?

1172. **தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்**
பைதல் உழப்ப தெவன்.

இன்னல்கள் இங்குவரும் என்றேதான் மைவிழிகள்
எண்ணாமல் அன்றவரைக் காட்டிவிட்டு- நம்மால்தான்
வந்தது! நாம்தான் பொறுக்கவேண்டும் என்றின்றி
கண்கள் துடிப்பதேனோ? சொல்.

1173. **கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்**
இதுநகத் தக்க துடைத்து.

என்னையும் கேட்காமல் வேகமாக அன்றவரை
அன்புடன் பார்த்துவிட்டே இன்றிங்கே- தன்னந்
தனியாய் அழுவதைப் பார்த்தால் சிரிப்பே
கனியிதழில் தோன்றுதடி! காண்.

1174. **பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா**
உய்வில்நோய் என்கண் நிறுத்து.

காதலிலே சிக்கவைத்துத் தப்பவோ, வாழவோ
ஏதுமற்ற ஓர்நிலையைத் தந்துவிட்டு- வேதனையில்
தானும் அழமுடி யாமல் தான் நீர்வறண்டு
போனதே! பாவந்தான் பார்.

1175. **படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்**
காமநோய் செய்தவென் கண்.

கடலளவே கொள்ளாமல் காதலென்னும் துன்பம்
படர்வதற்குக் காரணமாய் இங்கே- நடந்து கொண்ட
கண்களோ இப்போது தூங்க முடியாமல்
துன்பத்தில் வாடுதடி! சொல்.

1176. **ஓஓ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்**
தாஅம் இதற்பட் டது.

காதலால் நான்படும் துன்பத்தை அன்றிங்கே
தூதுசென்ற கண்களும் இன்றிங்கே- வேதனையில்
வாடித்தான் ஓஓ துடிக்கிறதே வாடியதைப்
பார்த்தால் மகிழ்ச்சிதான்! சொல்

1177. உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து வேண்டி அவர்க்கண்ட கண்.

இழைந்து குழைந்து அவரை ஆசை
இழைபின்னப் பார்த்த விழிகளே- களைத்துப்
பிரிவை நினைத்தே உறங்காமல் கண்ணீர்
துளியுமின்றி வாடுங்கள் இன்று.

1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க் காணா தமைவில கண்.

உள்ளத்தால் இன்றி உதட்டளவில் மட்டுமே
சொல்லி விரும்பியவர் வாழியவே!- அள்ளிப்
பருகிய என்விழிகள் அன்பரை எண்ணி
உருகுதடி தூக்கமின்றித் தான்.

1179. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை ஆரஞர் உற்றன கண்.

அவர்வராத நேரம் அவர்வரவை எண்ணித்
துவண்டேதான் என்விழிகள் தூங்கா- அவர்வந்தால்
என்று பிரிவாரோ என்றெண்ணித் தூங்காது!
துன்பமே கண்களின் சொத்து.

1180. மறைபெறல் ஊராக் கரிதன்றால் எம்போல் அறைபறை கண்ணார் அகத்து.

அடிக்கும் பறையொலிபோல் உள்ளத்தில் உள்ள
துடிப்பையோ கண்கள் அழுகை- வெடிப்பொலியால்
காட்டிவிடும்! நான்மறைக்கும் காதலை ஊரறிய
ஊட்டிவிடும் கண்களே தாம்.

119. பசப்புறு பருவரல்

**1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.**

அவர்பிரிந்து செல்வதற்கோ ஒப்புதலைத் தந்தேன்!
துயரக் கொடியாய்ப் பசலை- அழகுமேனி
எல்லாம் தெரியப் படர்வதை யாரிடத்தில்
சொல்வேன்? மானே! விளம்பு.

**1182. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.**

பிரிவின் துயரம் அவர்தந்தார் என்றே
களிக்கும் பெருமிதம் கொண்டே- செழித்துப்
படர்கிறதே மேனியில் இந்தப் பசலை!
அடக்கமே இல்லை இதற்கு.

**1183. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.**

என்னைப் பிரிந்துசென்ற நேரத்தில் காதலரோ
என்னழகை, நாணத்தை அள்ளியே- தன்னுடன்
கொண்டுசென்றார்! கைம்மாறாய் துன்பத்தை, இப்பசலை
வண்ணத்தைத் தந்துவிட்டார்! பார்.

**1184. உள்ளுவன் மன்யான் உரைப்ப தவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு.**

என்னவரைப் பற்றித்தான் எண்ணுகின்றேன் பேசுகின்றேன்!
என்னுடலில் எப்படித்தான் இப்பசலை- என்னும்நோய்
வஞ்சகமாய் வந்து படர்ந்தது? ஏங்குகிறேன்!
கொஞ்சும் கிளியே! உணர்த்து.

**1185. உவக்காணெம் காதலர் செல்வார் இவக்காணென்
மேனி பசப்பூர் வது.**

இப்பொழுதுதான் என்னைப் பிரிந்துசென்றார் காதலர்!
அப்படி என்னதான் வந்ததோ?- சுற்றிப்
படர்ந்தே அதற்குள் உடலை வளைக்கத்
தொடங்கியதே இப்பசலை நோய்.

**1186. விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.**

விளக்கின் வெளிச்சம் விலகுதலைப் பார்த்து
புழங்கும் இருள்போல், நெருக்கம்- கழன்று
தலைவன் நெகிழ்வதைச் சார்ந்து பசலை
வலைவீசி வம்பிழுக்கும்! வந்து

**1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.**

தழுவிக் கிடந்தேன்! நினைவை மறந்தேன்!
தழுவலைச் சற்றே விலக்கி- இழுபறி
யோடு படுத்துவிட்டேன்! அவ்வளவுதான் இப்பசலை
கூடுகட்டித் துள்ளியது பார்.

**1188. பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்.**

இவள்மேனி கண்டதே இப்பசலை நோய்தான்!
கலகலப்பாய்க் கூறுபவர் இந்நோய்- உலவிடக்
காரணம் அன்பர் பிரிந்ததுதான் என்றுசொல்ல
யாருமில்லைப் பாரிலே! பார்.

1189. **பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்**
நன்னிலையர் ஆவர் எனின்.

என்னைப் பிரிந்தவர் இங்கே நலமுடன்
நன்றாக வாழ்ந்திடுவார் என்றாலே - என்னுடலில்
இப்பசலை நோயிங்கே நன்கு படரட்டும்!
எப்படியும் தாங்கிடுவேன்! சொல்.

1190. **பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்**
நல்காமை தூற்றார் எனின்.

சம்மதிக்க வைத்துப் பிரிந்துசென்ற காதலரை
என்றென்றும் தூற்றமாட்டார் என்றாலோ - இங்கே
பசலை படர்ந்தவள் என்ற பெயரை
அகங்குளிர ஏற்பேன் விளம்பு

120. தனிப்படர் மிகுதி

1191. **தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
காமத்துக் காழில் கனி.

தம்மால் விரும்பப் படுகின்ற காதலர்,
தம்மை விரும்புகின்ற பேறுபெற்றோர் - இங்கே
விதையற்ற நற்கனியைப் பெற்றவ ராவர்!
புதையல்தான் அக்காதல் வாழ்வு.

1192. **வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
வீழ்வார் அளிக்கும் அளி.

காதலர்கள் சந்தித்தே அன்பைப் பொழிவது
மாசற்ற வாழ்க்கைக்கு மக்களே- நேசமுடன்
பார்க்கின்ற வானம் பருவமழை பெய்வதுபோல்
நேர்த்தியான இன்பமாகும் சொல்.

1193. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.

விரும்பிய காதலர் இங்கே பிரிந்தும்
திரும்பி வருவார், தருவாய்- பெருகிடும்
இன்பம் தருவார் என்ற உளச்செருக்கோ
பெண்களுக்கு ஏற்றதுதான் சொல்.

1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

காதலரால் இங்கே விரும்பப் படாத
காதலியாய் மாறும் நிலையிருந்தால்- வேதனைத்
தணலில் புழுவாகி தீவினை சூழ்ந்த
அணங்கென்றே சொல்லும் புவி.

1195. நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.

நாமோ அவரைத்தான் காதலித்து வாழ்கின்றோம்!
ஏனோ, அவரிங்கே என்மீது- தேன்மழைக்
காதலைப் பெய்யவில்லை! இப்பண்பு கொண்டவரால்
தோகை எனக்குண்டோ வாழ்வு?

1196. ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
இருதலை யானும் இனிது

ஒருபக்கம் காதல் உணர்ச்சி, கொடுமை!
இருபக்கம் காவடி ஏந்தும் - சரிசம
பாரம்போல் காதலோ பாரில் இருந்தால்தான்
வேர்ப்பலாபோல் தித்திக்கும் வென்று.

1197. **பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்**
ஒருவர்கண் நின்றொழுகு வான்.

காமன் ஒருபக்கம் சார்ந்தே இருப்பதால்
பூமணத்தாள் என்னை வருத்துகின்ற - ஊன்பசலை
நோய்தன்னைக் கண்டுகொள்ள இங்கே மறுக்கின்றான் !
சேயிழையைக் காப்பதுயார்? செப்பு.

1198. **வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து**
வாழ்வாரின் வன்கணார் இல்.

இனியசொல் ஒன்றும் வராத நிலையில்
துணிந்தே பிரிவுத் துயரை- அணிகலனாய்ப்
பூண்டே உயிர்வாழும் கல்நெஞ்சக் காரிகைபோல்
இங்குள்ளோர் வேறுண்டோ? சொல்.

1199. **நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்**
டிசையும் இனிய செவிக்கு.

என்மீது அன்பைப் பொழியாமல் இவ்வுலகில்
என்னவர் இங்கே பிரிந்திருக்கத்- தன்னந்
தனியாய் இருந்தபோதும் காதலரைப் பற்றி
இனியபுகழ் கேட்பதே தேன்.

1200. **உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்**
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

நெஞ்சமே! வாழ்கவே! உன்னிடம் அன்பற்ற
பொன்மனத் தாரிடம் ஆறுதலை- இங்கே
பெறுவதைக் காட்டிலும் ஆழியைத் தூர்த்தல்
கடுமையோ? இல்லை! எளிது.

121. நினைந்தவர் புலம்பல்

1201. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

உண்ணுகின்ற நேரத்தில் மட்டுமே இன்பத்தை
இங்குதரும் கள்ளைவிட நெஞ்சத்தில்- எண்ணியதும்
இன்பத்தை ஊற்றெடுக்க வைக்கின்ற காதலின்பம்
இன்பத்துள் எல்லாம் இனிது.

1202. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

உள்ளம் கவர்ந்தவரை நெஞ்சில் நினைத்தாலே
துள்ளும் பிரிவுத் துயரமெல்லாம்- வெள்ளம்
வடிவதைப்போல் ஓடிவிடும்! எப்படியும் காதல்
கொடிபடர்தல் இன்பந்தான் இங்கு.

1203. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

தும்மல் வருவதுபோல் வந்தேதான் நின்றுவிடும்!
இந்தநிலை போலத்தான் என்னவரும்- என்னை
நினைக்கத் தொடங்கி நினைக்காமல் விட்டே
இணைப்பை விடுவாரோ? சொல்.

1204. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ உளரே அவர்.

என்னுடைய நெஞ்சத்தில் என்றும் இருக்கின்றார்
அன்பகமே! நானும் அவர்நெஞ்சில்- என்றும்
இருப்பேனா? என்றே இதயம் தவிக்க
தரணியில் வாழ்கின்றேன்! சார்ந்து.

1205. தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல் எம்நெஞ்சத் தோவா வரல்.

அவருடைய நெஞ்சில் எனக்கிடம் இல்லை!
அவர்மட்டும் இப்படி உள்ளார்- அவரோ
இடைவிடாமல் என்நெஞ்சில் வந்தே புகுவார்!
படையெடுக்க வெட்கமில்லை யோ?

1206. மற்றுயான் என்னுளேன் மன்னோ அவரொடுயான் உற்றநாள் உள்ள உளேன்.

அவருடன் கூடிவாழ்ந்த நாட்களை எண்ணி
உலவும் உயிருடன் உள்ளேன்- களங்கமற்ற
உள்ளத்தில் அந்த நினைவில்லை என்றாலோ
இவ்வுலகில் வேறெதனால் வாழ்வு?

1207. மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன் உள்ளினும் உள்ளம் சுடும்.

அவரளித்த இன்பத்தை நாள்தோறும் எண்ணி
உவந்தே மறக்காத போதே பிரிவோ
தழலாய்ச் சுடுகிறது! அஃதை மறந்தால்
நிலையென்ன வாகுமோ? சொல்.

1208. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ காதலர் செய்யும் சிறப்பு.

காதலரை எவ்வளவு நானோ நினைத்தாலும்
வேதனையோ கோபமோ கொள்ளமாட்டார்- தூதனுப்பி
என்னைச் சிறைப்பிடித்த அன்பர் எனக்கருளும்
இன்ப உதவி அது.

1209. **விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்**
அளியின்மை ஆற்ற நினைந்து.

''நாமிருவர் வேறல்ல! ஒன்றெனச் சொன்னவர்
பூமனமோ வாடப் பிரிந்துசென்றார் - தேனகமோ
எண்ணி வருந்துவதால் என்னுயிரோ போய்க்கொண்டே
எண்ணுதடி நாள்களை இங்கு.

1210. **விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்**
படாஅதி வாழி மதி

நிலவேநீ வாழ்க! இணைபிரி யாமல்
உலவியவர் இன்றோ பிரிந்தே- உலவுகின்றார்!
கண்களால் காணும் வரைக்கும் மறையாமல்
அன்புத் துணையாக நில்.

122. கனவு நிலை உரைத்தல்

1211. **காதலர் தூதொடு வந்த கனவினுக்**
கியாதுசெய் வேன்கொல் விருந்து

என்மன வேதனையைப் போக்கிடும் எண்ணத்தில்
என்னவர் தூதைச் சுமந்துவந்து- என்னுயிரை
மீட்டிவிட்ட இந்தக் கனவுக்கு நான்படைக்க
ஏற்ற விருந்தெதுவோ? சொல்.

1212. **கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின் கலந்தார்க்**
குயலுண்மை சாற்றுவேன் மன்.

கயல்போன்ற என்கண்கள் நான்கெஞ்சிக் கேட்கத்
துயரின்றி தூங்குமென்றால் அந்தக் - களத்தில்
கனவில் வருகின்ற காதலர்க்கோ சொல்வேன்
தினமுயிரைத் தாங்குகின்றேன்! என்று.

1213. **நனவினான் நல்கா தவரைக் கனவினால்**
காண்டலின் உண்டென் உயிர்

நேரிலே வந்தேதான் நேசமழை பெய்யாத
பார்புகழ் என்னவரோ நான்காணும்- தூய்மைக்
கனவில் வருகின்றார்! காண்கின்றேன்! அம்மா!
தினமுயிர் வாழ்கின்றேன்! பார்.

1214. **கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**
நல்காரை நாடித் தரற்கு.

நேரில் வராத அகங்குளிர் காதலரை
நேரிழை காணும் கனவிலே- நேரடியாய்க்
கொண்டுவந்து காட்டும் கனவாலே காதலின்பம்
என்மனத்தில் துள்ளுதடி! காண்.

1215. **நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்**
கண்ட பொழுதே இனிது.

காதலரை நேரிலே கண்டபோதோ இன்பந்தான்
நேசக் கரத்தால் தழுவியது- மாசற்ற
காதலரை நானே கனவிலே காணுகின்ற
காதலின்பம் நெஞ்சுக் கினிது.

1216. **நனவென ஒன்றில்லை ஆயின் கனவினாற்**
காதலர் நீங்கலர் மன்.

நினைவென்னும் தூரிகை என்றன் கனவின்
புனைவை அழிக்கவில்லை என்றால்- கனவிலே
சந்தித்த காதலர் நீங்கிப் பிரியாமல்
இன்பநிலை கண்டிருப்போம் சொல்.

1217. **நனவினான் நல்காக் கொடியார் கனவினான்**
என்னெம்மைப் பீழிப் பது.

என்னிடம் நேரிலே அன்பைப் பொழியாமல்
என்கனவில் தேடிவந்தே துன்புறுத்தி- என்னுடைய
நோயாம் பிரிவுத் துயரத்தை பொங்குகடல்
பேரலையாய் மோதவைப்ப தேன்?

1218. **துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்**
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து

நானுறங்கும் நேரத்தில் நல்லவரோ என்தோளில்
தான்கிடந்து வாழ்கின்றார் தாகமுடன்- மான்விழியாள்
நான்விழிக்கும் வேளையிலே நாசூக்காய் நெஞ்சிற்குள்
தான்நுழைந்து கொள்கின்றார்! சாது

1219. **நனவினான் நல்காரை நோவர் கனவினான்**
காதலர்க் காணா தவர்.

என்னுடைய காதலர் என்கனவில் வந்தேதான்
இன்பமழை பெய்வதைக் கொஞ்சமும்- இங்கே
உணராதோர் நேரிலே பார்க்கவர வில்லை
எனநொந்தே கூறுகின்றார் பார்.

1220. **நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்**
காணார்கொல் இவ்வூ ரவர்.

என்னைப் பிரிந்திருக்கும் என்னவரை ஏசுகின்ற
மண்ணக மக்களோ தங்களது- அன்பரைத்
தத்தம் கனவிலே காண்பதே இல்லையோ?
மற்றவரைச் சாடாமல் வாழ்.

123. பொழுது கண்டு இரங்கல்

**1221. மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.**

மாலைப் பொழுதாநீ! இல்லையில்லை! காதலரை
வேல்விழி மாதர் பிரிந்திருக்க - வேலென
அந்த மகளிரின் இன்னுயிரைத் தாக்கித்தான்
புண்படுத்தும் தீய பொழுது.

**1222. புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை**

மயங்குகின்ற மாலைப் பெழுதே! நான்தான்
துயரத்தில் வாழ்கின்றேன் இங்கே - தரணியில்
என்னைப்போல் நீயுமேன் வாடுகின்றாய்? உன்துணையும்
என்னவர் போல்தானா? சொல்.

**1223. பனியரும்பிப் பைதல்கொள் மாலை நுனியரும்பித்
துன்பம் வளர வரும்.**

என்னவர் என்னருகில் நின்றபோது அஞ்சியே
வன்பசலை ஏந்திவந்த மாலையோ- இன்றெந்தன்
இன்னுயிர் நோகுமாறு துன்பமுடன் நாள்தோறும்
என்னை வருத்துதடி ஏன்?

**1224. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.**

என்னவர் உள்ளபோதோ இன்னுயிரை நாள்தோறும்
நன்றாய் வளர்த்திட்ட மாலையோ- இன்று
பிரிந்திருக்கும் நேரம் கொலைக்களத்து வாளாய்
கருணையின்றிப் பாய்கிறது! பார்.

**1225. காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.**

காலைப் பொழுதே! கலையரசி நானுனக்கு
நாளெல்லாம் செய்திட்ட நன்மையென்ன- மாலையே
என்மீது வாட்டுகின்ற இன்னலை ஏவிவிட
என்னதீமை நான்செய்தேன்? இங்கு.

**1226. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன்.**

முன்பெனக்கோ இன்பத்தைத் தந்திருந்த இம்மாலை
துன்பத்தை இப்படிக் கொட்டுமென்றே- என்னவர்
என்னைப் பிரியாத போதோ உணரவில்லை
என்மனந்தான்! என்செய்வேன்? சொல்.

**1227. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.**

காதலென்னும் இந்நோயோ காலை அரும்பாகி
தோதாய்ப் பகலில் முதிர்ந்தேதான்- தூதுவிட்டு
மாலைப் பொழுதில் மலர்ந்து விடுகிறது!
தோள்மயக்கம் கொள்கிறது! சொல்.

**1228. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை**

இன்பத்தை அள்ளிவந்த ஆயன் குழலோசை
துன்பத்தை ஏந்தும் மாலைப் பொழுதிற்கே
இன்னலுக்குத் தூதாகி, கொல்லுகின்ற ஆயுதமாய்
இன்றிங்கே மாறியது! காண்.

1229. **பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு மாலை படர்தரும் போழ்து**

முன்பெல்லாம் நான்மட்டும் இங்கே மயங்கித்தான் துன்புற்றேன்! நாளும் இனியெல்லாம் - இன்னலைத் தூவுகின்ற மாலையில் ஊர்முழுதும் தான் மயங்கி தேயுதடி துன்பத்தில்! சொல்.

1230. **பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை மாயுமென் மாயா உயிர்.**

பொருளீட்டச் சென்றிருக்கும் என்னவரை எண்ணி உருகாத என்னுயிரோ மாலைப்-பொழுதின் நெருக்கத்தில் மாய்ந்தேதான் போகிறது நாளும்! செருக்கைப்பார்! மாலைக்கோ! இங்கு.

124. உறுப்புநலன் அழிதல்

1231. **சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி நறுமலர் நாணின கண்.**

பிரிவுத் துயரில் அழுவதால் கண்கள் ஒளியிழந்து விட்டன! முன்போ- விழிகளைக் கண்டு மலர்களோ நாணும்! விழிகளோ மென்மலர்முன் நாணுதே இன்று.

1232. **நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் பசந்து பனிவாரும் கண்.**

பசலையால் நீர்சிந்தும் கண்கள், விரும்பி உடன்பட்ட காதலர் அன்பை- மறந்துவிட்டே சென்றதை இங்கே முரசொலித்துக் காட்டுதடி! இந்த விழிகளைச் சாடு.

1233. **தணந்தமை சால அறிவிப்ப போலும்**
மணந்தநாள் வீங்கிய தோள்.

தழுவி இருந்தபோது நன்கு தழைத்துச்
செழுமையாய்த் தோன்றிய தோள்கள்- அருகிருந்த
அன்பர் பிரிந்ததால் வாடி மெலிந்ததை
இங்கே உரைக்கிறது பார்.

1234. **பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்**
தொல்கவின் வாடிய தோள்.

என்னைப் பிரிந்தவரின் ஏக்கத்தால் மென்தோள்கள்
தன்னழகைத் தானிழந்து தத்தளித்தே- இன்றிங்கே
வாடியதால் எந்தன் வளையல்கள் நிற்காமல்
ஊடிக் கழன்றிடுது பார்.

1235. **கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு**
தொல்கவின் வாடிய தோள்

வளையல்கள் எல்லாம் கழன்றுவிழ, தோள்கள்
களையிழந்து பேரழகை நீக்கி- மலைக்கவைத்தே
இங்கே பிரிந்திருக்கும் காதலரின் வன்கொடுமை
இன்னதென்றே சொல்லுதடி பார்.

1236. **தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்**
கொடியர் எனக்கூறல் நொந்து

தோள்கள் மெலிவதையும் என்கை வளையல்கள்
நாளும் கழன்று விழுவதையும்- பார்ப்பவரோ
என்னவரைச் சாடி இரக்கமில்லை என்கின்றார்!
நொந்துபோனேன் நானிதனைக் கேட்டு.

1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூசல் உரைத்து.

பிரிந்திருக்கும் என்னவரைத் தேடித்தான் சென்றே
மெலிந்திருக்கும் தோள்களைப் பற்றி - விளித்துரைத்து
நெஞ்சே! அவருக் குணர்த்தி பெருமைகொள்!
அஞ்சாமல் தூதுசெல் நீ.

1238. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

கட்டி அணைத்திருந்த கைகளையோ கொஞ்சத்தான்
விட்டுத் தளர்த்தினார்! காதலி- சற்றே
இடைவெளி காண, பொறுமையோ இன்றிப்
படர்ந்தது நெற்றியில் நோய்.

1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

தழுவித் திளைத்திருந்த நேரத்தில் காற்று
நுழைந்ததால் இங்கே பிரிவோ- அழைத்ததென
எண்ணித்தான் காதலியின் நீண்டிருக்கும் கண்களில்
வன்பசலை வந்தது பார்.

1240. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு

ஏந்திழையாள் நெற்றியோ வண்ணப் பசலையை
ஏந்திய கோலத்தைக் கண்டேதான்- மான்விழிகள்
தாம்பெற்ற துன்பத்தை நெற்றியும் பெற்றதற்கு
ஏங்கித்தான் நொந்ததே இங்கு.

125. நெஞ்சொடு கிளத்தல்

**1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கு மருந்து**

இம்மருந்தோ! அம்மருந்தோ! எம்மருந்தோ இவ்வுலகில்
எங்கே இருந்தாலும் தீராத- என்காதல்
நோய்தீர நல்மருந்தை நெஞ்சே! நினைத்தேதான்
பார்த்துரைக்க மாட்டாயோ? சொல்.

**1242. காத லவரிலர் ஆகநீ நோவது
பேதமை வாழியென் நெஞ்சு.**

அவருக்கோ நம்மிடத்தில் அன்பில்லை! ஆனால்
உவந்தேதான் நீமட்டும் இங்கே- அவரை
நினைத்து வருந்துதல் மூடத் தனமே!
நினைப்பதை நெஞ்சே நிறுத்து.

**1243. இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.**

இங்கிருந்து கொண்டு அவரை நினைத்தேதான்
துன்புறும் நெஞ்சே! துவளாதே- அன்பருக்கோ
நமது துயரை நினைத்தே இரங்க
மனமில்லை! கல்நெஞ்சம்! பார்.

**1244. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.**

என்னவரைக் காண்பதற்குச் செல்கின்ற நெஞ்சமே
கண்களையும் நீயழைத்துச் சென்றுவிடு- அன்பரைக்
காணும் வெறியிலே என்னையே தின்றுவிடத்
தோன்றுதடி கண்களுக்கு! பார்.

1245. செற்றார் எனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம் உற்றால் உறாஅ தவர்.

நாமோ விரும்பினாலும் நம்மை விரும்பாமல்
ஏனோ அவரிருந்தும் நம்மைத்தான்- மானே
வெறுத்துவிட்டார் என்றெண்ணிக் கைவிடும் உள்ள
உறுதி எனக்குண்டோ? சொல்.

1246. கலந்துணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்துணராய் பொய்க்காய்வு காய்தியென் நெஞ்சு.

ஊடல் விளையாட்டில் நேரடியாய்க் காதலரை
சாடையாய்க் கூட சினக்காமல்- கூடலுக்குத்
தூதுவிடும் அன்பரிடம் இப்பொழுது நெஞ்சமே!
சாடுகின்ற பொய்க்கோபம் ஏன்?

1247. காமம் விடுவொன்றோ நாண்விடு நல்நெஞ்சே யானோ பொறேனிவ் விரண்டு.

நெஞ்சமே! ஒன்றிங்கே காதல் விருப்பத்தை
என்றுமே விட்டுவிடு! இல்லையேல்- அஞ்சுகின்ற
நாணத்தை விட்டுவிடு! இவ்விரண்டைத் தாங்கிட
தேன்மகளுக் கில்லை வலு.

1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர் பின்செல்வாய் பேதையென் நெஞ்சு.

நம்மேல் இரக்கமின்றி அன்பர் பிரிந்துவிட்டார்
என்றேதான் ஏங்கிப் பிரிந்தவர்- பின்னாலே
ஏதும் அறியாமல் ஓடுகின்ற நெஞ்சமே!
பேதைதான் என்றுமே! நீ

1249. **உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ**
யாருழைச் சேறியென் நெஞ்சு.

நம்மவரோ என்நெஞ்சே! நம்மனதில் தானிருக்க
அமைதியை விட்டே அலைந்து- சுமந்து
அவரையே தேடி அவனியில் நீயும்
எவரிடம் போகிறாய்? இங்கு.

1250. **துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையமோ**
இன்னும் இழத்தும் கவின்.

சேராமல் என்னைப் பிரிந்தேதான் சென்றவரை
ஆவலுடன் உள்ளத்தில் தாங்குவதால்- தூய
புறஅழகை மட்டுமல்ல, உள்ளழகைக் கூட
உடனிழக்கப் போகின்றேன் நான்.

126. நிறையழிதல்

1251. **காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்**
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

நாணமென்னும் தாழ்ப்பாள் இடப்பட்ட மாதரின்
மானமென்னும் பேரடக்கப் பண்புக் கதவினைத்
தேனமுதக் காதல் விருப்பமோ கோடரியாய்
ஏனோ உடைக்கிறது? சொல்.

1252. **காமம் எனவொன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை**
யாமத்தும் ஆளும் தொழில்.

காதலுக்கோ என்றும் இரக்கமில்லை என்பேன்நான்!
வேதனையை ஏற்படுத்தி நள்ளிரவில்- ஆதிக்கந்
தன்னைத்தான் என்நெஞ்சில் இங்கே செலுத்துதடி!
என்னென்பேன் இக்கொடுமை? சொல்.

1253. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

மனக்காதல் தன்னை மறைக்க நினைப்பேன்
எனக்கும் தெரியாமல் இங்கே- கணப்பொழுதில்
துள்ளித்தான் தும்மலைப்போல் தோழி! வெளிப்பட்டுத்
தள்ளியதே நாணத்தில் தான்.

1254. நிறையுடையேன் என்பேன்மன் யானோவென் காமம்
மறையிறந்து மன்று படும்.

மனஅடக்கம் கொண்டவள்நான் என்றே நினைத்தேன்!
மனமோ அடங்காமல் ஊரார்- மனமறிய
காதலை இங்கே வெளிப்படுத்தி மன்றத்தில்
சோதனையைத் தந்ததடி இங்கு.

1255. செற்றார்பின் சொல்லப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று.

தன்னைப் பிரிந்துசென்ற காதலரைப் பின்தொடர்ந்தே
சென்றிட எண்ணாத நெஞ்சடக்கம்- மண்ணகத்தில்
காதல்நோய் உற்றவர்க்கோ என்றும் இருப்பதில்லை!
காதலுக்கோ கண்ணில்லை பார்.

1256. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர்.

என்னைப் பிரிந்துசென்ற அன்பற்ற காதலரின்
பின்செல்ல வேண்டுமெனக் காதல்நோய் - என்னைத்தான்
தூண்டித் துடிக்கவைத்துப் பார்க்கிறதே! இக்கொடிய
தூண்டிலைத் தப்பவழி சாற்று.

1257. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

நான்விரும்பித் தேர்ந்தெடுத்தக் காதலரோ ஆசையால்
தேன்மொழியாள் ஆசை நிறைவேற- தானே
விரும்பித்தான் செய்கின்ற போதிங்கே நாணம்
இருப்பதையே நான்மறந்தேன்! ஏன்?

1258. பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை

என்றன் மனஅடக்கக் கோட்டையைச் சீரழிக்கும்
வன்மையான ஆயுதம், மனத்திருடன்- என்னவனாம்
காதலனின் நற்பணிவுத் தேன்பாகு சொற்களன்றோ!
காதலுக்குத் தாழில்லை! சாற்று.

1259. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.

அவர்வந்தார்! ஊடலென்னும் தேரேறிச் சென்றே
விலகலாம் என்றிருந்தேன்! நெஞ்சம்- கலந்தே
அடக்கமின்றிக் கெஞ்சியதும் தோற்றே தழுவி
அடங்கி மகிழ்ந்தேன் இணைந்து

1260. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்.

நெருப்பிலிட்ட மென்கொழுப்பாய்த் தானுருகும் நெஞ்சம்
இருப்பவர்கள், கூடிக் களித்தே - உருகிய
பின்னிங்கே ஊடல் கணைதொடுத்தே நிற்கின்ற
நெஞ்சத்தைக் கொள்வாரோ? கூறு.

127. அவர்வயின் விதும்பல்

1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற நாளொற்றித் தேய்ந்த விரல்

வருவார்! வருவார்! எனப்பார்த்தே என்றன்
இருவிழிகள் இங்கே ஒளியை- இழந்தன!
நாள்களை எண்ணச் சுவர்க்குறியைத் தொட்டணைத்தே
தேய்ந்தன என்விரல்கள் இங்கு.

1262. இலங்கிழாய் இன்று மறப்பினென் தோள்மேல் கலங்கழியும் காரிகை நீத்து.

பிரிவை மறக்க, அவரை மறக்கும்
தெளிவை எடுக்க முயன்றேன்- ஒளியிழந்து
தோள்கள் மெலிந்தே வளையல்கள் தாம்கழன்று
கோள்மூட்டும் நிச்சயம்! பார்.

1263. உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் வரல்நசைஇ இன்னும் உளேன்.

ஊக்கத்தை மட்டும் துணையாகக் கொண்டேதான்
ஏக்கமுடன் சென்றுள்ள காதலன்- தேற்றிட
வந்திடுவார் என்பதற் காக, உயிருடன்
இங்கே இருக்கின்றேன்! பார்.

1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக் கோடுகொ டேறுமென் நெஞ்சு.

கூடிக் கலந்தவர் இங்கே பிரிந்துசென்றார்!
வாடிய நெஞ்சமோ ஏக்கமுடன்- தேடியே
நாடி வருவதை உச்சாணிக் கொம்பில்
ஏறித்தான் பார்க்குதடி! பார்.

1265. **காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்**
நீங்குமென் மென்தோள் பசப்பு.

கண்குளிர என்றன் கணவரைக் கண்டிருப்பேன்!
கண்டபின்பே என்னுடைய தோள்களைத்- துன்புறுத்தி
வாடவைத்த அப்பசலை வண்ணமோ தானாக
ஓடி மறைந்துவிடும்! சொல்.

1266. **வருகமன் கொண்கன் ஒருநாட் பருகுவன்**
பைதல்நோய் எல்லாம் கெட.

இத்தனைக் காலம் வராதவன் வந்திடுவான்!
சித்திர மேனியாள், வந்தவுடன்- தொட்டணைத்துத்
துன்பமோ நீங்கிட இன்ப நதியிலே
அன்புடன் நீந்துவேன்! ஆம்.

1267. **புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
கண்ணன்ன கேளிர் வரின்.

பிரிந்தவர் மீண்டுமிங்கே வந்தவுடன் நானோ
பரிவுடன் கூடுவேனோ? ஊடிச்- சரிவேனோ?
கூடலையும் ஊடலையும் ஒன்றாய் இணைப்பேனோ?
கூடே குழம்புதடி! கூறு.

1268. **வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து**
மாலை அயர்கம் விருந்து.

மன்னவன் வெற்றி முரசறைய வெல்லட்டும்!
வென்றாலோ என்மனைவி என்னருகில் - இன்பமுடன்
வீற்றிருக்க மாலைப் பொழுதில் விருந்தளிப்போம்!
காற்றைப் புறக்கணிப்போம் நாம்.

1269. **ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார் வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.**

தொலைதூரம் சென்றுவிட்டார் தோழி! அவரை
மலைப்புடனே எண்ணி மனத்தில்- நிலைகுலையும்
பெண்களுக்கு ஓர்நாள் பிழைத்தல் பலநாள் போல்
நெஞ்சத்தில் தோன்றும் நெடிது.

1270. **பெறினென்னாம் பெற்றக்கால் என்னாம் உறினென்னாம் உள்ளம் உடைந்துக்கக் கால்**

பிரிவால் நிலையிழந்த சேயிழையை நாடிப்
பரிவுடன் சந்தித்தால் என்ன? - அருகிலே
நின்றால்தான் என்ன? தழுவினால் தான் என்ன?
துன்பம் விரக்தியின் வித்து.

128. குறிப்பறிவுறுத்தல்

1271. **கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண் உரைக்கல் உறுவதொன் றுண்டு.**

சொல்லாமல் நாளும் மறைத்துவைக்கப் பார்த்தாலும்
துள்ளும் விழிகள் தடையுடைத்தே- சொல்லத்
துடிக்கின்ற செய்தியொன்றோ இங்குண்டு! தேனே!
துடிக்கும் விழிகளே தூது.

1272. **கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப் பெண்நிறைந்த நீர்மை பெரிது.**

கண்நிறைந்த பேரழகும் வண்ணமிகு மூங்கில்போல்
இங்கமைந்த தோளும் மெருகூட்டும் - என்னுடைய
காதலிக்குப் பெண்மையின் பண்புகள் ஊற்றெடுக்கும்
தேகமே பேரழகாம் செப்பு.

1273. **மணியில் திகழ்வதரு நூல்போல் மடந்தை**
அணியில் திகழ்வதொன் றுண்டு.

மணியாரத் திற்குள் மறைந்திருக்கும் நூல்போல்
புனிதவதி ஏந்தும் அழகில் - இனிமையாய்
என்னை மயக்கும் குறிப்பொன்று இருக்கிறது!
இன்னதென்று நானறியேன்! ஆம்.

1274. **முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை**
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.

மொட்டு முதிர்ந்து முழுதும் மலரும்முன்
சற்றும் வெளிவரா தண்மணம்போல்- இப்பேதை
ஏந்தும் நகைமொட்டில் இங்கே புறத்திலே
தோன்றாக் குறிப்பொன் றுள.

1275. **செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்**
தீர்க்கும் மருந்தொன் றுடைத்து.

வண்ண வளையல்கள் துள்ள வருகின்ற
என்னவளின் பார்வைக் குறும்பிலே - என்னைத்
துளைக்கின்ற துன்பத்தைத் தீர்க்கும் மருந்தை
வழங்கும் குணமுண்டு! பார்.

1276. **பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி**
அன்பின்மை சூழ்வ துடைத்து.

அன்புடன் வந்து நெருங்கித் தழுவுகின்ற
என்னவரின் பண்பு நலனிலே - இங்கவர்
மீண்டும் பிரிந்துசெல்லும் அக்குறிப்புத் தோன்றுதடி!
என்னென்பேன் இத்துயரை? நான்.

**1277. தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.**

குளிர்ச்சியான நீர்த்துறைக்குச் சொந்தமான அன்பர்
களித்தே தழுவிய போதும்- பிரிந்துசெல்லும்
எண்ணத்தை என்வளையல் முன்னறிந்தே கைவிட்டே
இங்கே கழன்றன பார்.

**1278. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.**

நேற்றுத்தான் என்னைப் பிரிந்துசென்றார் காதலர்!
ஊற்றெடுத்த இப்பசலை இங்கேயோ- ஏக்கத்தை
ஏந்திப் பலநாட்கள் சென்றன போலத்தான்
தேங்கிப் படர்கிறது பார்.

**1279. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது.**

பிரிவால் கழலும் வளையலைப் பார்த்தாள்!
மெலிந்தேதான் வாடுகின்ற தோளையும் பார்த்தாள்!
பிரிந்தவரை நாடித் தொடரும் குறிப்பை
தளிரடியைப் பார்த்துணர்த்தி னாள்.

**1280. பெண்ணினாற் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு.**

காதலால் பாதித்த நோய்தன்னைக் கண்களால்
தூதுவிட்டே இங்கே இரந்துநிற்கும்- பாகுநிலைக்
கோலத்தில் பெண்மைக்குப் பெண்மையைச் சேர்த்தாற்போல்
தூயவள் தோன்றுகின்றாள்! சொல்.

129. புணர்ச்சி விதும்பல்

**1281. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.**

நினைத்ததும் உள்ளம் மகிழ்தலும்! பார்க்கும்
இமைநிறையக் கண்டாலே இன்பம் விளைந்தே
இணைகின்ற இன்பமோ கள்ளுண்போர்க் கில்லை!
துணைநாடும் காதலுக்கே உண்டு.

**1282. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.**

காதல் பனைபோல் உயர்ந்து பெருகித்தான்
சாதனைக்கு வித்தூன்றும் போக்கிலே- வேதனைக்குத்
தூதுவிடும் ஊடல், தினையளவும் கொள்ளாமல்
பாடுபொருள் ஆகித்தான் கூடு.

**1283. பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணா தமையல கண்.**

என்னை அரவணைக்கும் எண்ணமின்றி இவ்வுலகில்
தன்விருப்பம் போல இருந்தாலும்- அன்பரைக்
காணாமல் என்கண்கள் நிம்மதி காண்பதில்லை!
தேனகந்தான் என்றும் அவர்.

**1284. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு.**

காதலரைப் பார்ப்பதற்கு முன்பிங்கே ஊடவேண்டும்
வேதனையைத் தூரவேண்டும் என்றிருந்தேன்- நாதனைப்
பார்த்ததும் நெஞ்சமோ எல்லாம் மறந்தேதான்
ஆர்வமுடன் கூடியது காண்.

1285. **எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்**
பழிகாணேன் கண்ட இடத்து.

கண்களுக்கு மைதீட்டும் நேரத்தில் அக்கோலோ
கண்களுக்கு இங்கே தெரியாது- அன்பரைக்
காணுகின்ற வேளையிலே அன்னாரின் குற்றங்கள்
தோணாமல் ஓடிவிடும் பார்.

1286. **காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்**
காணேன் தவறல் லவை.

அவரைநான் பார்த்தபோது அன்பரசி நானோ
தவறுகளைக் காணேன்! தமிழே!- அவரிங்கே
அப்படித்தான் சென்றவுடன் அய்யோ! தவறுகளை
மட்டுமே எண்ணும் மனது.

1287. **உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்**
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

வெள்ளமோ உள்ளிழுத்துக் கொண்டுசெல்லும் என்றறிந்தும்
துள்ளித்தான் நீரில் குதிப்பதைப்போல்- எள்ளளவும்
வெற்றி கிடைக்கா(து) எனினும் ஊடலைப்
பற்றி விளையாடல் ஏன்?

1288. **இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்**
கள்ளற்றே கள்வநின் மார்பு.

உள்ளம் கவர்ந்திட்ட கள்வனே! துன்பத்தை
அள்ளி எனக்களித்த போதுமிங்கே- கள்மயக்கம்
கொண்டவர்கள் கள்ளையே நாடுதல்போல் தூண்டவைத்தே
இங்கே மயக்குமுந்தன் மார்பு.

1289. **மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**
செவ்வி தலைப்படு வார்.

மலரினும் மென்மை படைத்தது காதல்!
உளமாற அத்தகைய இன்பம்- வளர்வதற்கோ
அத்தகைய மென்மையுடன் எண்ணி நுகர்பவர்கள்
முத்தே! சிலர்தான் உணர்.

1290. **கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்**
என்னினும் தான்விதுப் புற்று.

கண்களால் சுட்டெரித்தே ஊடியவள் தன்னகத்தில்
தண்மலராய் மாறித்தான் தூண்டிவிடும்- இன்பத்தை
நாடித்தான் என்னையும் விஞ்சி விரைந்துவந்து
கூடிவிட்டாள் என்னுடன் தான்.

130. நெஞ்சோடு புலத்தல்

1291. **அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே**
நீயெமக் காகா தது.

என்நெஞ்சே! நம்மை நினைக்காமல் வாழ்வதற்கோ
அன்பருக்கு நற்றுணையாய் என்னவரின்-நெஞ்சம்
இருக்கிறது! நீயோ துணைக்கு வராமல்
உருகுவதேன்? என்னவரைச் சூழ்ந்து?

1292. **உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்**
செறாஅரெனச் சேறியென் நெஞ்சு.

என்மீதோ அன்பற்ற நெஞ்சம் படைத்தவர்
என்றறிந்தும் துள்ளுகின்ற என்நெஞ்சே- கொஞ்சமும்
கோபப் படமாட்டார் என்றெண்ணி அன்பரிடம்
தாபமுடன் செல்கின்றா யோ?

1293. கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ பெட்டாங் கவர்பின் செலல்.

நெஞ்சே! எனைவிடுத்து அன்பரையே பின்தொடர்ந்து
சென்றிடும் உன்றன் குணமிங்கே- துன்பத்தால்
கெட்டவர்க்கு நண்பரில்லை என்பதுபோல் அல்லவா
இத்தரணி சொல்லும் உணர்.

1294. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

ஊடலில் ஊசலாட வைத்தபின்பு அப்பயனைக்
கூடலில் கண்டு சுவைக்கின்ற- தேடல்
உனக்கில்லை! உன்னிடத்தில் இம்முறைகள் பற்றி
மனமில்லை பேச எனக்கு.

1295. பெறாஅமை அஞ்சும் பெறினபிரி வஞ்சும் அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.

என்னைப் பிரிந்திருந்திருந்தார்! என்னவரோ இல்லையென்று
என்நெஞ்சம் அச்சத்தை ஏந்தியது!- வந்துவிட்டால்
என்று பிரிவாரோ என்றஞ்சி ஏங்கிடும்!
துன்பமே நெஞ்சின் துடிப்பு.

1296. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத் தினிய இருந்ததென் நெஞ்சு.

பிரிவுத் துயரத்தில் வாடித் தனியே
இருந்து தவிக்கின்ற போதோ- உலுக்கிய
என்நெஞ்சம் என்னையே தின்பதுபோல் கட்டவிழ்த்த
துன்பத்தை என்சொல்ல? நான்!

1297. **நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாவென்**
மாணா மடநெஞ்சிற் பட்டு.

அவரை மறக்க முடியாமல் வாடித்
துவளும் மடநெஞ்சைச் சார்ந்தே- உலகத்தின்
பெண்ணணியாம் நாணத்தை நானும் மறந்துவிட்டேன்!
என்மனம் இவ்வளவு தான்.

1298. **எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர்திறம்**
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

பிரிந்துசென்ற என்னவரை நானோ இகழ்ந்து
திரிந்தால் எனக்கே இழிவாகும் என்றே
உரியவரின் நற்பெருமை பற்றியே நெஞ்சம்
களிப்புடன் எண்ணும் இங்கு.

1299. **துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய**
நெஞ்சந் துணையல் வழி.

துன்பங்கள் வாட்டுகின்ற காலத்தில் நெஞ்சமே
இங்கே துணையாக நிற்காமல்- புண்படுத்தும்
போக்கைக் கடைப்பிடித்தால் வேறுயார் உற்றதுணை
ஏற்பாரோ நானறியேன்! கூறு.

1300. **தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய**
நெஞ்சம் தமரல் வழி.

என்னுடைய நெஞ்சமே இங்கே உறவிழையைப்
பின்னவில்லை! இவ்வுலகில் மற்றவர்கள்- என்னுடன்
நாளும் உறவின்றி வாழ்தல் எளிதுதான்!
தூவும் துயர்தான் தொடர்ந்து.

131. புலவி

**1301. புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.**

நாம்ஊடும் நேரத்தில் நல்லவரோ காதலாலே
தான்படும் வேதனையைச் சற்றேநாம்- ஆனமட்டும்
பார்க்கலாம் ஊடல்செய்! பாய்ந்தோடிச் செல்லாதே!
ஆரத் தழுவாதே! ஆம்.

**1302. உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.**

ஊடலுக்கும் கூடலுக்கும் ஊசலாடும் காலமோ
வேகவைக்கும் நல்லுணவில் உப்பைப்போல்- தோதாய்ச்
சிறிதளவே ஆடவேண்டும்! நீண்டால் உணவில்
அதிகஉப்பு சேர்த்தாற்போல் ஆம்.

**1303. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.**

ஊடலுக்குள் உள்ளாடி ஊடலை நீக்காமல்
வேடம் கலைந்தே தழுவாமல்- தாகமுடன்
செல்வதோ இன்னலில் வாடுவோர்க்கோ இன்னலையே
உள்ளத்தில் சேர்ப்பதுபோ லாம்.

**1304. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.**

ஊடலிலே வேறுபட்டு நிற்கின்ற ஆரணங்கின்
ஊடலைத் தீர்க்காமல் கூறுபோடும்- சாடலோ
வாடியுள்ள பூங்கொடியை வேரோ டறுக்கின்ற
மாதிரிதான் வெண்ணிலவே! பார்.

1305. **நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை**
பூவன்ன கண்ணார் அகத்து.

பூவிழியாள் மேல்மனத்தில் பொங்கிவந்து கூத்தாடும்
பாவியமாம் ஊடலென்னும் பண்புநலன்- பாவினத்தின்
பாடுபொருள் காதலரின் பேரழகுப் பேரொளியை
கூடவைக்கும் நற்பண்பாம் கூறு.

1306. **துனியும் புலவியும் இல்லாயின் காமம்**
கனியும் கருக்காயும் அற்று.

பெரும்பிணக்கும் மற்றும் சிறுபிணக்கும் இங்கே
ஒருங்கே அமையாத காதல்- திருமண
வாழ்க்கை முதிர்ந்த பழமும், இளம்பிஞ்சைப்
போலவும் ஆகிவிடும் பார்.

1307. **ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது**
நீடுவ தன்றுகொல் என்று.

தழுவிக் கலந்திருக்கும் காலம் வளர்ந்து
பழுக்குமோ அன்றிச் சுருங்கி- வளராதோ
என்றேதான் எண்ணுவதால் ஊடலிலும் ஒருதுன்பம்
உண்டென்றே இங்கே உணர்.

1308. **நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியும்**
காதலர் இல்லா வழி.

நம்மை நினைத்தே என்றும் வருந்துகிறார்
என்றுணரும் நெஞ்சம் படைக்காத- அன்பரை
நாமெண்ணித் துன்பப் படுவதால் என்னபயன்?
வீணென்றே எண்ணி விலகு.

1309. **நீரும் நிழல தினிதே புலவியும்**
வீழுநர் கண்ணே இனிது.

நிழலுக் கருகிலுள்ள நீரே சுவையாய்க்
குளிர்ச்சியாய் என்றும் இருக்கும்- வெளிப்படையாய்
அன்புள்ளம் கொண்டோ ரிடத்திலே கொள்கின்ற
என்புருகும் ஊடல் இனிது.

1310. **ஊடல் உணங்க விடுவாரோ டென்னெஞ்சம்**
கூடுவோம் என்ப தவா.

ஊடல் வலைவிரித்து வாடவிட்டு வேடிக்கை
நாடகம் போடுகின்ற ஏந்திழையைக்- கூடவேண்டும்
என்றேதான் நெஞ்சம் முயல்வதற்குக் காரணம்
பொங்கிவரும் ஆசைதான்! சொல்.

132. புலவி நுணுக்கம்

1311. **பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்**
நண்ணேன் பரத்தநின் மார்பு.

பெண்ணாக உள்ளோர் அனைவருமே உன்மார்பைக்
கண்களாலே உண்பதால் அப்பெண்கள்- என்னவனே
எச்சில் படுத்திவிட்டார்! அத்தகைய மார்புதனை
எக்கணமும் சேரமாட்டேன்! நான்.

1312. **ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை**
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

ஊடிநின்ற நேரத்தில் வேண்டுமென்றே தும்மினார்!
நாடிவந்து நீடுவாழ்க! என்றேதான்- பாடிநின்று
வாழ்த்துவேன் என்றே நினைத்துவிட்டார்! பாவமவர்!
வாழ்த்துவேனோ? பேசுவேனோ? நான்.

1313. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று

மரத்தின் மலர்களை மாலையாக்கி நானோ
தவழவிட்டுப் பார்த்தேன்! அவளோ- எவளுக்கோ
காட்டத் துணிந்தே அணிந்துள்ளீர்! என்றேதான்
வாட்டிச் சினம்கொண்டாள் இங்கு.

1314. யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள் யாரினும் யாரினும் என்று.

மற்றவரைக் காட்டிலும் உன்னிடமே என்காதல்
பற்றிப் படர்கிறதே என்றுரைத்தேன்- மற்றவரா?
யாரைவிட? யாரைவிட? என்றேதான் நச்சரித்தாள்!
பாவமவள் ஊடிநின்றாள்! பார்.

1315. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக் கண்நிறை நீர்கொண் டனள்.

இப்பிறவிக் காலத்தில் என்னன்பே! உன்னையோ
எப்பொழுதும் நான்பிரியேன் என்றதும்- தத்தை
அப்படி யானால் அடுத்த பிறவியில்
அப்படியோ? என்றாள் இடிந்து.

1316. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப் புல்லாள் புலத்தக் கனள்.

'உன்னை நினைத்தேன்' எனச்சொன்னேன்! காதலியோ
என்னை இடையில் மறந்துவிட்டீர்!- அந்த நிலை
கொண்டதால் தானே நினைத்தீர்கள்! என்றுடனே
புண்பட்டே ஊடினாள் மாது.

1317. **வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்**
யாருள்ளித் தும்மினீர் என்று

தும்மினேன்! வாழ்த்தினாள்! தூதுவிட்டே எத்தோகை
உன்னை நினைத்தாளோ உள்ளத்தில்- என்றுடனே
ஊடினாள்! வாடினாள்! ஊடலின் பேரழகில்
கூடினாள் கோபத்தில்! கூறு.

1318. **தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்**
எம்மை மறைத்திரோ என்று

தும்மலை நானடக்கி நின்றேன்! அவளோ
உங்களுக்கு வேண்டியவள் உங்களை- எண்ணியதை
நானறியா வண்ணம் மறைக்கின்றீர் என்றேதான்
தேன்மொழியால் சொன்னாள் சினந்து.

1319. **தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்**
இந்நீரர் ஆகுதிர் என்று.

ஊடிநின்ற என்னவளைத் தேற்ற பணிந்தேதான்
நாடி மகிழ்வித்தேன்! சேயிழையோ- வாடித்தான்
இப்படித்தான் மற்ற மகளிரிடம் நிற்பீரோ!
பட்டென்றே சொன்னாள் கனன்று.

1320. **நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்**
யாருள்ளி நோக்கினீர் என்று.

என்னவளின் பேரழகு சிந்தும் நளினத்தை
கண்ணிமைக்க மாட்டாமல் பார்த்திருப்பேன் - என்னழகை
யாருடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றீர் என்றேதான்
சேராமல் நிற்பாள் கடிந்து.

133. ஊடலுவகை

1321. **இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்**
வல்ல தவரளிக்கும் ஆறு.

தவறுகளே இல்லாத போதுமிங்கே ஊடல்
நிழலாட்டம் காதலர் சேர- அவர்களின்
அன்பைத் தருவாய் வளர்க்கக் கூடியதே!
இன்பத்தை நாடவைக்கும் காண்.

1322. **ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி**
வாடினும் பாடு பெறும்.

காதலரின் என்புருகும் அன்பிங்கே வாடுகின்ற
சோதனைக்கு ஊடுதல் காரணமாய்த் தோன்றினாலும்
சேதமற்ற அந்த மிகச்சிறிய இன்னலுக்குப்
பாடவல்ல நற்பெருமை உண்டு.

1323. **புலத்தலிற் புத்தேன்நா டுண்டோ நிலத்தொடு**
நீர்யைந் தன்னார் அகத்து.

நிலத்தோடு நீர்கலந்தாற் போலத்தான் அன்பில்
கலந்திருக்கும் என்னவரை ஊடி- வளர்க்கின்ற
இன்பத்தைப் போல தேவர்கள் வாழும்
விண்ணுலகில் உண்டோ? புகல்.

1324. **புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்**
உள்ளம் உடைக்கும் படை

அவரை அணைத்தே இணைபிரி யாமல்
மயங்கிடக் காரணமாய் ஊடல்- விளங்கினாலும்
என்றன் உறுதியைச் சீர்குலைக்கும் ஆயுதமும்
அங்குதான் உள்ளது! பார்.

1325. **தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்**
அகறலின் ஆங்கொன் றுடைத்து.

தவறே புரியாத சூழ்நிலையில் கூட
அவளது ஊடலுக்குள் வாடித்- துவண்டே
மெல்லிய தோள்களைச் சேரா திருப்பதிலும்
செல்லமான இன்பம் உளது.

1326. **உணலினும் உண்ட தறலினிது காமம்**
புணர்தலின் ஊடல் இனிது.

உண்பதைக் காட்டிலும் அஃது செரிப்பதே
இன்பம்! அதுபோலக் கூடுவதைக் காட்டிலும்
பொங்குகின்ற ஊடல் அலைகளில் மூழ்குவதோ
இன்பமாம் காதலர்க்கு! காண்.

1327. **ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்**
கூடலிற் காணப் படும்.

ஊடலில் தோற்றவரே உண்மையில் வென்றவராம்!
பாடுபொருள் வெற்றியைப் பாங்கான- கூடலின்
இன்பத்தில் இங்கே அறியலாம் நெஞ்சமே!
என்றும் இதுதான் இசைவு.

1328. **ஊடிப் பெறுகுவம் கொல்லோ றுதல்வெயர்ப்பக்**
கூடலில் தோன்றிய உப்பு

நெற்றிப் பரப்பில் வியர்வை அரும்பிடத்
தொட்டணைத்துக் கூடுவதால் உண்டாகும்- மட்டற்ற
இன்பத்தை மீண்டும் இவளுடன் ஊடித்தான்
இங்கு பெறுவோமா? சொல்.

1329. **ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப**
நீடுக மன்னோ இரா.

ஏந்திழையாள் ஊடலைக் கட்டவிழ்த்துத் துய்க்கட்டும்!
மாந்துகின்ற சித்திரத்தின் ஊடலை- ஆனமட்டும்
தீர்ப்பதற்கு நானோ இரந்துநிற்க இவ்விரவு
தீராமல் நீளட்டும் நன்கு.

1330. **ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்**
கூடி முயங்கப் பெறின்.

காதல் தழைப்பதற்கு இன்பமோ ஊடுதல்தான்!
சேதமற்ற ஊடலுக்கு இன்பமோ- வேடமின்றி
அவ்வூடல் நீக்கித் தழுவிடும் கூடலே!
உள்ளத்திற் கின்பந்தான் சொல்.